Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 23 செவ்வாய்க்கிழமை (09.10.2012) பக்கங்கள் 20 ஓசை – 009



















# சொந்த நிலங்களில் குடியமர்வு படிப்படியாக நிகழ்ந்தேறும்

## நேற்றைய கூட்டத்தில் அமைச்சர்



மக்கள் அனைவரும் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். மக்களின் நிலங்கள் அவர்களுக்கே உரியது என்ற நிலைப்பாட்டிலும் நாம் உறுதியாக உள்ளோம். அதன் படியே மீள்குடியேற்றமும் பெருமளவில் நடைபெற்றுள்ளமையும் யதார்த்தபூர்வமாக அனைவரும் காணக்கூடியதாக உள்ளது.

இராணுவத்தின் வசமுள்ள காணிகளும் விடுவிக்கப்பட்டு பெருமளவு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்த விடயமாகும். அத்துடன் இராணுவத்தின் வசமுள்ள காணிகள், வீடுகள் தற்போதும் விடுவிக்கப்பட்டு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். மிகுதியாக உள்ள காணிகள், வீடுகள் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடாத்தி அவற்றையும் மக்களிடம் ஒப்படைப்பதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெறும். வலி. வடக்கு பிரதேசத்தில் 21 கிராம அலுவலர் பிரிவுகளில மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் அத்தோடு 08 கிராம அலுவலர் பிரிவுகளில்

19 ஆம் பக்கம் பார்க்க

## கடலில் மூழ்கி இளைஞர் மரணம்

பருத்தித்துறைக் கடற்பரப்பில் மீனவர் ஒருவர் கடல் அலைகளில் அடித்துச்செல்லப்பட்டு மரணமடைந்துவிட்டார். நடுக்கடலில் தரித்துநின்ற மீன்பிடிப் படகை நோக்கி சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் வரை நீந்திச் செல்ல முற்பட்ட வேளையிலேயே கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டு மரணமடைந்துள்ளார். கல்லாறு விசுவமடுப் பகுதியைச் சேர்ந்த வீரகுமார் ரஞ்சித்குமார் (வயது-22). நேற்று நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தை அடுத்து கடற்படையினர் சடலத்தை மீட்டெடுத்தனர். தொடர்ந்து பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (01,116)

## அதிகரித்தது மதுபான விலை

மதுபானத்தின் விலைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 20 தொடக்கம் 40 ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக டிஸ்டிலறிஸ் கம்பனி அறிவித்துள்ளது. பியர் போத்தல்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அதிகரிக்கப்பட வேண்டிய விலை தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என அக்கம்பனி தெரிவித்தது.

19 ஆம் பக்கம் பார்க்க

## குடும்பஸ்தருக்கு எமனான குறுக்கே பாய்ந்த நாய்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ-9 வீதியின் பாரதிபுரம் வீதியில் நேற்று காலை இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் எள்ளுக்காடு உருத்திரபுரம் எனும் முகவரியைச் சேர்ந்த க.சுகந்தன் (வயது-37) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருகையில், குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை முன்னால் நாய்குறுக்காகப் பாய்ந்ததில் அந்நபர் கீழே விழுந்து தலையில் அடிபட்டு ஸ்தலத்தில் உயிரிழந்தார்.

சடலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்துக் குறித்து கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (77)

## பிளவடைந்த கூட்டமைப்பா இந்தியா செல்லவுள்ளது

### கேட்கிறார் வினோ எம்.பி.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் நிமித்தம் புதுடில்லி செல்லவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் அல்லது கட்சித் தலைவர்கள் அனைவரும் கலந்துகொள்ளாமையானது மிகுந்த ஏமாற்றத்தையும், சந்தேகத்தையும் எமக்குத் தோற்றுவித்துள்ளது. கூட்டமைப்புக்குள் குழப்பநிலை அல்லது முரண்பாடுகள் தோன்றுவதற்கு கூட்டமைப்பின் அங்கத்துவக்கட்சிகளின் தலைவர் களே பொறுப்புக்கூற வேண்டும்.

கூட்டமைப்பின் தலைவர்கள் ஒன்றாக ஓர் அணியாக ஏன் இந்தியா செல்லக்கூடாது எனக் கேட்க விரும்புகின்றேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் தொடர்பாக தனது ஆதங்கத்தையும், சந்தேகத்தையும் வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில், நாளையதினம் இந்திய அரச

19 ஆம் பக்கம் பார்க்க

## இயக்கச்சி வளைவை நிமிர்த்த காணிகேட்கும் அதிகார சபை

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியின் இயக்கச்சிச் சந்தியில் உள்ள வளைந்த வீதியினை நேராக்குவதற்கு தனியாரிடம் இருந்து 1200 சதுர அடி காணியைப் பெற்றுத்தருமாறு யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவிடம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கையை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏ-9 வீதித் திட்டப் பொறியியலாளர் முன்வைத்துள்ளார்.

இந்த வீதி வளைந்திருப்பதன் காரணமாக அண்மைய நாடகளில் பெருமளவு வீதி விபத்துக்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த விடயம் குறித்து நேற்றைய அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்ட போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

குறித்த தனியாருக்குச் சொந்தமான காணி பெற்றுத்தரப்படும் இடத்து இந்த வீதியின் வளைந்த பகுதி நேராக்கப்பட்டு நிர்மாணிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ்

19 ஆம் பக்கம் பார்க்க

## மரக்கிளை தலையில் விழுந்து முதியவர் ஸ்தலத்தில் மரணம்

(வடமராட்சி)


வடமராட்சி குரும்பசிட்டி வைரவர் கோவில் பகுதியில் உள்ள வாசிகசாலைக்கு அண்மையாக நின்ற ஆலமரத்தின் கிளையை தறிக்க முற்பட்ட சமயம் கிளை தலையில் விழுந்து முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதில் தம்பசிட்டி புலோலி வடமேற்கைச் சேர்ந்த இராசையா தபேந்திரம் (வயது - 65) என்ற ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரே இவ்வாறு பலியானவராவார்.

குறித்த வாசிகசாலைக்கு மேலாகச் சென்ற மரத்தின் கிளையை வெட்டிய சமயம் கிளையைக் கயிறுகட்டி இழுக்கும் போது குறித்த நபர் முன்பக்கமாக நின்று இழுத்தமையாலேயே கிளை முறிந்து இந்த நபரின் மேல் விழுந்துள்ளது. சம்பவ இடத்தில் மயக்கமடைந்த நபரை மந்திகை ஆதார வைத்திய

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜப்பான், பிரிட்டன் விஞ்ஞானிகளுக்கு மருத்துவத்துவத்திற்கான நோபல் பரிசு



2012 ஆம் ஆண்டிற்கான மருத்துவத்துக்கான நோபல் பரிசை பிரிட்டிஷ் மற்றும் ஜப்பான் விஞ்ஞானிகளின் இருவர் பெறுகின்றனர். இது குறித்த முறையான

19 ஆம் பக்கம் பார்க்க

# வீதி விபத்துக்களைத் தடுப்பது எப்படி செயலகக் கூட்டத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் பிரதான வீதிகளூடாகப் பயணிக்கும் பயணிகள் வாகனங்கள் அதிகமாக விபத்தில் சிக்கிவருவது குறித்தும் அத்தகைய விபத்துக்களைத் தடுப்பது குறித்தும் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகி நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தின் போது யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர்களில் ஒருவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏ-9 வீதியில் இயக்கச்சிப் பகுதியில் அடிக்கடி பயணிகள் வாகனங்கள் விபத்துக்குள்ளாகி வருவதுடன், தற்சமயம் அது காப்பற் வீதியாக மாற்றப்பட்டிருப்பதன் காரணமாக இந்த விபத்துக்கள் அண்மை நாட்களில் அதிகமாகியிருப்பது குறித்தும் அபிவிருத்திக் குழுவின் கவனத்திற்கும் கொண்டு வந்தார். இதனைத்தடுக்க அந்தப் பகுதியில் உள்ள வீதியில் 100 மீற்றருக்கு ஒரு வேகத்தடையைப் போடுவது குறித்தும் ஆலோசனையை முன்வைத்தார். இந்த ஆலோசனையை ஜனாதிபதிக்கும், துறைமுகங்கள் பெருந்தெருக்கள் வீதி அபிவிருத்தி அமைச்சிற்கும் அனுப்பப்பட்டு அனுமதி பெறப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கான அனுமதி கிடைத்ததும் அந்த வழிகளில் 100 மீற்றருக்கு ஒரு வேகத்தடை போடப்பட்டு வீதி விபத்துக்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மைய நாட்களில் ஏ-9 வீதியிலும் பருத்தித்துறை வீதியிலும் இத்தகைய பல வீதி விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.

இந்த விபத்துச் சம்பவங்களில் பலர் உயிரிழந்தும், படுகாயங்களுக்கும் உள்ளாகியிருந்தனர். அத்துடன் பயணிகள் வாகனங்கள் உட்பட பல வாகனங்கள் சேதமடைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வீதி விபத்துச் சம்பவங்களைக் குறைப்பதற்கு போக்குவரத்துப் பொலிஸாரின் எண்ணிக்கையை யாழ்.குடாநாட்டில் அதிகரிக்குமாறு ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் இந்த அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் ஆலோசனை ஒன்றையும் முன்வைத்தார்.

மேலும் இவ்வாறு யாழ்.குடாநாட்டில் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்திருப்பது குறித்தும், அதனைத்தடுப்பது குறித்தும் பல்வேறு மட்டங்களிலும் ஆராயப்பட்டு வருவதாகவும் இந்த அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா, இ)

# வயோதிபர் மரணம் போதையால் வந்த வினை

மதுபோதையில் தண்ணீர் அள்ளுவதற்காக கிணற்றடிக்குச் சென்ற வயோதிபர் ஒருவர் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 5.00 மணிக்கு கந்தர்மடம் மணல்தறை லேன் பகுதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த கந்தையா சபாநடேசன் (வயது-60) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் நேற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக அவ் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# மீள் நியமனத்திற்கு விண்ணப்பிக்கலாம்

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சில வைத்தியசாலைகளில் தாதியர் பற்றாக்குறை நிலவுவதால், வைத்தியசாலைகளில் பணியாற்றுவதற்காக 65 வயதிற்குட்பட்ட ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பணியாற்ற விருப்புடையோர் அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கேதுவாக உடனடியாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# வேலையாட்களுக்கு தட்டுப்பாடு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நாள்வேலை செய்யும் பணியாளர்கள் இல்லாததினால் தமது தேவைகளின் பொருட்டு சில அத்தியாவசிய வேலைகளைச் செய்து முடிப்பதற்கு மக்கள் அவதியுறுவதாகத் தெரிய வருகின்றது.

போரின் பின்பு பல அபிவிருத்தித் திட்டங்களில் சாதாரண நிலையில் பணியாற்றுவதற்குப் பெரும்பாலான இளைஞர்கள், குடும்பஸ்தர்கள் சென்றுள்ளதால் இப்பணியாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சாதாரண ஒருநாள் வேலைக்குரிய வேதனமாக ஆயிரத்து 200 ரூபா வழங்கப்படுகின்ற போதிலும், ஆயிரத்து 500 ரூபா மேலதிக தொகையாகக் கொடுக்க முன்வரும் நிலையிலும் சாதாரண பணியாளர்களைத் தேடிக் கொள்ள முடியாதுள்ளதாகவும் தெரிய வருகிறது. (138)

# மிளகாய்ச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

## நெடுந்தீவில் செயற்றிட்டம்

(வேலணை)

மகிந்த சிந்தனையின் நோக்கின் அடிப்படையில் எதிர்காலத்தில் வெளிநாட்டில் இருந்து மிளகாய் இறக்குமதிகளை குறைத்துக் கொள்வதற்கான ஏற்பாட்டின் அடிப்படையில் இலங்கையில் அதிகளவில் மிளகாய்ப் பயிரை உற்பத்தி செய்வதற்கு விவசாய திணைக்களமானது நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி நெடுந்தீவில் அதிகளவில் மிளகாய்ப் பயிரினத்தைப் பயிரிடுவதன் நோக்கத்திற்கு அமைவாக இன்றைய தினம் இலவச மிளகாய் விதைகளை வழங்கியுதவும் வைபவமொன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நெடுந்தீவில் உள்ள நியாப் நிறுவனத்தின் பொது மண்டபத்தில் வேலணை விவசாயப் போதனாசிரியர் செ. இராமநாதன் தலைமையில் இடம்பெறவிருக்கின்ற இந்த நிகழ்வில் இலவச மிளகாய் விதைகள் வழங்கல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன், விதைகளைப் பெற்றவர்களுக்கான தொழில்நுட்பப் பயிற்சிகளும் கருத்தரங்குகளும் நிகழவிருக்கின்றன.

விவாசயத் திணைக்களத்தினைச் சேர்ந்த பாடவிதான தொழில்நுட்ப அதிகாரிகளும் இந்தப் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துரைகளையும், பயிற்சிகளையும் வழங்கவுள்ளனர்.

இந்த மிளகாய்ச் செய்கையினை மேற்கொள்வதற்காக நெடுந்தீவில் ஏற்கனவே 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். புங்குடுதீவு, நெடுந்தீவுப் பகுதிகளுக்கான விவசாய போதனாசிரியர் எஸ்.குலதுங்கன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (...)

# நிர்வாக சபைக் கூட்டம்

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிறுவனத் தலைவர் பா. ரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கொடிவாரம் தொடர்பாக ஆராயப்படவுள்ளதுடன் நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகளும் வெளியிடப்படவுள்ளதாகத் தலைவர் அறிவித்துள்ளார். (109)

# பால் பரிசோதிக்க பயிற்சி

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கான பசுப் பால் பரிசோதனைப் பயிற்சிநெறி ஒன்று இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 15, 16, 17 ஆம் திகதிகளில் திருநெல்வேலி விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் 3 நாள் பயிற்சி நெறி இடம்பெறவுள்ளது.

ஒவ்வொரு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திலும் அங்கம் வகிக்கும் ஆறு பேருக்கு இப்பயிற்சி வழங்கப்படும் என்றும், தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைத் தவறாது சமூகமளிக்குமாறு சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க உபதலைவர் வ.தர்மலிங்கம் கேட்டுள்ளார். (இ)



சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்திய சிறுவர் தின விழாவில் கலந்து கொண்ட யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும், மாணவிகளுடைய வரவேற்பு நடனத்தினையும் காணலாம்.

# நடமாடும் நூலக சேவை

சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலை பொது நூலகத்தினரால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடமாடும் நூலக சேவை நாளை காலை 11.00 மணிக்கு சரசாலை மயூரி முன்பள்ளியில் நடைபெறவுள்ளதாக நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (11)


மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தின்

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் சாதனையாளர்கள் வாழ்த்து - 2012



1. தமிழ்செல்வன் - கலிங்கராசா ஆதித்தன் - 157
2. பாஸ்கரன் பிருந்தன் - 153
3. இராசேந்திரன் மேரி றெக்சியா - 151
4. சதீஷன் நிதர்சனா - 146

ஆகியோரையும்

அவர்களுடன் 100 புள்ளிகளிற்கு மேல் பெற்ற 16 மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர்கள்

திரு.அ.சுகந்தன், ம.மயூதரன்

ஆகியோரையும் ஆசிரியர் கழகம் வாழ்த்துகிறது

தி.சசீதரன் (தலைவர்), ஆசிரியர் கழகம்
மு/சிலாவத்தை த.வி.

(C/2044)


# வீதிக்கு விமோசனம் எப்போது?

மாலு சந்தியிலிருந்து வியாபாரி மூலை வரையான பிரதான வீதி, மிக நீண்டகாலமாக புரமைக்கப்படாது குண்டும் குழியுமாக சேதமடைந்து காணப்படுவதால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நாளாந்தம் இவ்வீதியூடாகச் செல்லும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள் நெருக்கடியான நிலையை எதிர்நோக்குவதுடன் வாகனங்கள் குறிப்பாக துவிச்சக்கர வண்டியில் செல்வோர் வண்டி காற்றுப் போகும் அவல நிலையும் காணப்படுகிறது. இதேவேளை மெதடிஸ் மிஷன் தேவாலயத்திற்கு முன்பாகவுள்ள வீதியில் மதகு உடைந்துள்ளதால் இதனூடான வாகனப் போக்குவரத்தும் அபாயகரமானதாக காணப்படுகிறது.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பல தடவை தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்களின் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்தில்கொண்டு வீதியைப் புனரமைப்பதுடன் மதகையும் புனரமைக்க உரியவர்கள் ஆவன செய்ய வேண்டுமென இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (109)

# முல்லை மாவட்டத்தில் மீள்குடியேறிய அனைவருக்கும் நிரந்தர வீட்டுத்திட்டம்

## அரச அதிபர் தகவல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள அனைத்து மக்களுக்கும் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் நிரந்தர வீடுகள் வழங்கப்படும் என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ளவர்களுக்கான நிவாரணங்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் மீள்குடியமர்வின் போதான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இம்மக்களுக்கான வீட்டுத்திட்ட வசதிகள் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளது. இதன் முதற கட்டமாக 500 வீடுகளுக்கான நிர்மானப் பணிகள் ஆரம்பமாகி இடம் பெற்று வருகின்றன.

இந்திய வீடமைப்பு திட்டத்தின் நிர்மாணப் பணிகளின் ஆரம்ப வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

மேலும் நிரந்தர மலசலகூடம் நிர்மாணிக்கும் பணியும் நிரந்தர கிணறுகள் அமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்காலிகமாக வீடுகள் மலசல கூடங்கள் குழாய்க்கிணறுகள் தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான பொதுவசதிகள் அனைத்தும் பெற்றுக்கொடுக்கப்பட்டு வருவதுடன் இம்மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அதற்கான சகல நடவடிக்கைகளையும் தாம் மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கிராம அலுவலர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் கிராம அலுவலர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் வகையில் போட்டிப்பரீட்சைக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டிப்பரீட்சைக்கு 21 வயதுக்கு குறையாத 30 வயதுக்கு மேற்படாத ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். அத்துடன் இப்பரீட்சை மும்மொழிகளிலும், நடைபெறவுள்ளது.

மொழியாற்றல், பொது அறிவும் சவாலும் என்னும் 2 பிரிவுகளின் கீழ் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளதுடன் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்திணைக்களம். பெலவத்தை பத்திரமுல்ல என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

இப்பரீட்சை தொடர்பான கல்வித் தகைமை உள்ளிட்ட மேலதிக விபரங்களை தினமுரசு காரியாலயத்திலோ அல்லது 2012.10.05 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தகமானியிலோ பார்வையிட முடியும்.

# வழங்கப்படாத உதவிப்பணம் வங்கிப் புத்தகத்தில் வைப்பு

(வடமராட்சி)

கடந்த காலங்களில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்று வந்த 70 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் இம்மாதம் தொடக்கம் மாதாந்த உதவு தொகை ரூபா 1000 வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு பிரதேச செயலர் அலுவலகங்களினாலும் இவர்களுக்குரிய பணம் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிடப்பட்டு அவரவர் பெயரில் வங்கியில் வைப்பிலிடப்பட்டு அவரவரது பணவைப்புப் புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் தமக்குரிய மாதாந்த உதவு தொகை 1000 ரூபாவை அண்மையில் உள்ள அஞ்சல் உப அஞ்சல், அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தல்வழங்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள குடத்தனை, நாகர்கோயில், செம்பியன்பற்று, தாளையடி, ஆழியவளை, முள்ளியான், சுண்டிக்குளம் உப அஞ்சல் அலுவலகங்கள் மூலம் இம் மாதத்திற்குரிய உதவிப்பணம் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

பயனாளிகள் ஒவ்வொருவர் பெயரிலும் ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்களுக்குரிய உதவித் தொகை தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பில். இடப்பட்டுள்ளதாகவும் பணவைப்புப் புத்தகங்களில் வங்கி வரவில் இட்ட பின் மேலும் 3000ரூபாவையும் பெற்றுக் கொள்ள முடியுமென பிரதேச செயலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (70)

# புதிய நிர்வாகம் தெரிவு



(யாழ்ப்பாணம்)

அரியாலை தென் கிழக்கு உதயபுரம் கிராம அபிவிருத்திச் சங்க பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவருமான ஆ.இரவீந்திரதாஸன், நல்லூர் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ரி.சுரேந்திரன் கிராம சேவையாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது இதில் சி.அன்ரன் மரியசீலன், தலைவராகவும், செ.அந்தோனிப்பிள்ளை செயலாளராகவும், செ.ஸ்ரீதரன் உபதலைவராகவும், மார்க் ராங்கனி உபசெயலாளராகவும், வ.வசீகரன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# வலிகாமம் கல்விவலயத்தில் உளநல தின விழா

(வலிகாமம்)

சர்வதேச உளநலத் தினத்தை முன்னிட்டு, வலிகாமம் கல்வி வலயத்தினரால் நடத்தப்பட்டிருந்த 'சர்வதேச உளநலத்தின விழா' வெகுசிறப்பாக நேற்று முன்தினம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

வலயக்கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக யுனிசெப் நிறுவன அதிகாரி திருமதி. ராதிகா கலந்து கொண்டார்.

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு இடையில் நடத்தப்பட்டிருந்த ஓவியம், கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டியவர்களிற்கான சான்றிதழ்களும், பரிசில்களும் பிரதம விருந்தினரால் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

இவ்விழாவில் பெருந்தொகையான அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (06)

# புலமைப்பரிசில் பெறுபேறு

(வடமராட்சி)

இந்த வருடம் நடைபெற்ற 5ஆம்தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் யா/கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் இரண்டு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இதில் அன்ரன் மரியதாஸ் றொக்சலீன்-154 புள்ளிகளையும், கிறீஸ் துராசா பிறைடி-148 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். (70)

# "துயரக்கடல்" நூலுக்கு ஞாபகார்த்த விருது

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கியவட்ட அனுசரணையுடன் அகில இலங்கை ரீதியாக 2011ஆம் ஆண்டு வெளிவந்த கவிதை நூல்களில் மிகச்சிறந்தது எனத் தெரிவு செய்யப்பட்ட முல்லை கி.பி. நிதுனின் "துயரக்கடல்". என்னும் நூலுக்கு மூதறிஞர் கவிஞர் அரியாலையூர் ஐயாத்துரையின் ஞாபகார்த்த விருது வழங்கப்படவுள்ளது.

இந்நூலுக்கான பணப்பரிசிலையும், விருதினையும் மூதறிஞர் கவிஞர் அரியாலையூர் ஐயாத்துரையின் மகனும், யாழ் இலக்கிய வட்ட உறுப்பினருமான கவிஞர் ஐ.வரதராசா வழங்கவுள்ளார்.

இவ்விருது எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இலங்கை இலக்கியப் பேரவையின் விருது வழங்கும் விழாவில் வழங்கப்படவுள்ளது. இது வரை இந்த ஞாபாகார்த்த விருதினை ஆறு கவிஞர்கள் ஏற்கனவே கடந்த காலங்களில் பெற்றுள்ளார்கள் என பேரவைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# வேலைகள் துரிதகதியில்

பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சந்தையின் மேல் மாடி கட்டட வேலைகள் தற்போது துரித கதியில் நடைபெற்று வருகிறது.

கட்டடப்பணிகள் நிறைவு பெற்றவுடன் இவ்வருட இறுதிக்குள் திறக்கப்படவுள்ளதாக நகர சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (109)

# சிப்தொற புலமைப்பரிசில் 27 மாணவர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் சிப்தொற புலமைப் பரிசில் பெறுவதற்கு சமுர்த்தி உதவி பெறும் 27 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களில் 2011ஆம் ஆண்டு க.பொ.த(சா/த) பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு அதன் மூலம் இம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

க.பொ.த(சா/த) பரீட்சையில் தமிழிலும், கணிதத்திலும் திறமைச் சித்தி பெற்ற சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களின் பிள்ளைகள் இந்த புலமைப் பரிசிலுக்கு தகுதியானவர்களாவர் மேலும் இத்திட்டத்தின் மூலம் க.பொ.த(உயர்தர) வகுப்பில் கல்வி கற்று பரீட் சைக்கு தோற்றும் வரை மாதாந்தம் ஆயிரம் ரூபா பணமாக வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.



**பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலய அதிபரின் வேண்டுகோளிற்கு இணங்க யூ.ஆர் பிறண்ட் பௌண்டேசன் நிறுவனத் தலைவர் க.செவ்வேள் மற்றும் இயக்குனர் சுபாசினி வீரசிங்கம் அண்மையில் வித்தியாலயத்திற்கு விஜயம் செய்து அங்கு கல்வி கற்கும் 225 மாணவருக்கு பாதணிகளை வழங்கினர். இதில் நிறுவனத்தலைவர் மாணவருக்கு பாதணி வழங்குவதைக்காணலாம்**

நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயற்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாக மாறுகிறது.
- கார்ல் மார்க்ஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## வாழ்வதற்குக் காட்டும் வழி

சந்தீப் சைதன்யா என்ற துறவி எழுதிய 'நீயும் ஒரு அர்ஜுனன்தான்' என்ற நூலில், நமக்குத் தெரிந்த ஒரு கதைமயைச் சொல்லி, அதிலிருந்து நமக்குள்ளிருக்கும் ஒரு பண்பை மிக எளிதாக எடுத்துக்காட்டி விடுகிறார்.

குரங்குகளிடமிருந்து இழந்த தொப்பியைத் திரும்பப் பெற்றுக் கொண்ட தொப்பி வியாபாரியின் கதை எல்லோருக்கும் தெரியும். அவனுக்கு வயதாகிவிட்டது. தன் மகனுக்குத் தொப்பி வியாபார ரகசியங்களைப் போதித்து அவனைத் தயார் செய்து விடுகிறான். மகனும் தொப்பி வியாபாரத்துக்குக் காட்டு வழியாகப் புறப்பட்டான். முன்பு காட்டு வழியாகப் போகும்போது குரங்குகள் திருடிக் கொண்டு போனதையும், தொப்பிகளைத் தந்திரமாகத் தான் திரும்ப வாங்கியதையும் அவனிடம் தெரிவித்திருந்தார் தந்தை.

மகனும் வியாபாரம் தொடங்கினான். ஒருநாள் காட்டு வழியாகப் போகும்போது மரத்தடியில் தொப்பிக் கூடையை வைத்து விட்டு உறங்கினான். விழித்துப் பார்த்தபோது குரங்குகள் தொப்பிகளைத் திருடித் தலையில் வைத்திருப்பதைப் பார்த்தான்.

அப்பா சொல்லித் தந்த தந்திரம் அவனுக்கு நினைவுக்கு வந்தது. உடனே தன் தலையில் இருந்த தொப்பியை எடுத்துக் கீழே வீசியெறிந்தான். அதேபோல் குரங்குகளும் தங்களது தலையில் உள்ள தொப்பிகளை எடுத்துக் கீழே வீசும் என்று நினைத்தான். ஆனால் நடந்தது என்ன தெரியுமா?

மரத்திலிருந்து வேக வேகமாக இறங்கி வந்த குரங்குக் குட்டி ஒன்று தொப்பிக்காரன் வீசிய அந்தத் தொப்பியையும் பொறுக்கித் தன் தலையில் போட்டுக் கொண்டு அவனைப் பார்த்தது. சிரித்தபடி சொன்னது, "எங்களுக்கும் அப்பா உண்டு. தொப்பிக்காரனிடம் ஏமாறாமல் எப்படி தொப்பியை எடுக்க வேண்டும் என்று எங்கள் அப்பாவும் சொல்லித் தந்திருக்கிறார்" என்றது.

இது போலத்தான் நாமும். "நாம் மட்டுமே புத்திசாலிகள், நாம் செல்லும் வழிதான் சரி. நாம் மட்டுமே புத்திமான்கள்... ஏனையவர்கள் எல்லாரும் முட்டாள்கள்!" என நினைக்கிறோம் என்று அந்தக் கதையின் நீதியை விளக்குகிறார் துறவி.

அந்த நினைப்புக்காக தொப்பி வியாபாரிக்கு ஏற்பட்ட நஷ்டம் ஒரு கூடை தொப்பிகள்தான். ஆனால் அந்த நினைப்பில் சென்று நாம் அடைந்த இழப்புகளோ...! இப்போதும் கூட, மற்ற சமூகங்களையெல்லாம் முட்டாள்களாய் நினைத்துக் கொண்டிருப்பதால் தான் அவர்களோடு பேசத் தெரியவில்லை, அவர்களோடு சேர்ந்து செயற்பட முடியவில்லை, ஒரு பல்லின நாட்டுக்குள் நாம் வாழும் வழியை உருவாக்கிக் கொள்ளத் தெரியவில்லை.

நமது பிரச்சினைகளுக்கெல்லாம் மற்றவர்கள் மட்டுமே காரணம் என்று வாய்பாடாகச் சொல்லிக்கொண்டிருப்பதற்கு அப்பால் நாம் யோசிப்பதற்குத் தயாரில்லை. மற்றவர்களின் குறைகளை மட்டுமே பூதாகரமாக்கிக் கொண்டிருக்கும் அந்தத் தேர்தல் மேடை வீர வசனங்களையே உண்மையென்று நம்மை நாம் ஏமாற்றிக்கொண்டிருப்பதால்தான், தொடர்ந்து நமது மக்கள் வாழ்வை அழித்துக்கொண்டும் இருக்கிறோம்.

தம்மைத்தாமே புத்திசாலிச் சமூகமாக நினைத்துக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு, அதேபோலத் தாங்கள் கருதும் மோ. சிங்களவர்களோடும், தொ.பி. முஸ்லிம்களோடும் சேர்ந்து வாழ முடியவில்லை. இது ஏன் என்று கேட்டு விடை தெரிந்தால்தான் நாம் புத்திசாலிகளா என்பதும் உறுதிப்பட முடியும். அவர்கள் சரியில்லை என்று சொல்லிவிட்டுத் தப்புவது, நமது மக்கள் வாழ்வதற்குக் காட்டும் வழி அல்ல. - ஆசிரியர்

# சரியான கட்டமைப்புக்கள் கூட்டமைப்புக்குள் இல்லை

## விசனம் கொள்கிறார் சுரேஷ்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சரியான கட்டமைப்பு இல்லையென்பது வெளிப்படையான உண்மை. அதற்கென ஒரு உயர் மட்டக்குழுவோ அல்லது நிதிக் குழுவோ அல்லது பிரதேச கிராமியக் குழுக்களோ இல்லாத நிலையில் பேசுவதற்கான சந்தர்ப்பங்களோ முடிவு எடுக்கும் அதிகாரமோ யாரிடம் உள்ளது, எவரிடம் இருக்கிறது எனத்தேட வேண்டியுள்ளது என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவு சம்பந்தமாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதன் மூலம் ஏனைய கட்சிகளின் வரலாறும் தனித்துவமும் மறைந்து விடுமென எவரும் பயங்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு கட்சிக்கும் அதற்குரிய தனித்துவமும் வரலாறுமுண்டு.

அது தொடர்ந்து காப்பாற்றப்படுமென்ற நிபந்தனைக்குஅமையவே கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டுமெனக் கோரிவருகிறோம். ஏலவே கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் இரா. சம்பந்தன் தொடர்ந்தும் தலைவராக இருக்க வேண்டுமென்பதில் எங்களுக்குள் எந்த கருத்து வேறுபாடுமில்லை. கூட்டமைப்புக்குள் காணப்படும் உள்முரண்பாடுகள் பேசித் தீர்க்கயியிக்கூடியவை.

எனவேதான் ஒவ்வொருவரும் முடிவு எடுக்கும் போக்குக் காணப்படுகிறது. உதாரணத்துக்கு கூறப் போனால் மக்கள் போராட்ட மொன்றை நடத்தப் போகும் பட்சத்தில் ஒவ்வொருவரும் தாம் நினைத்த போக்கில் கருத்துகளை கூறி விடுவதனால் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு விடுகின்றன.

ஒருமித்த வடிவம் இல்லா நிலையில் பல்வேறுபட்ட விடயத்தை பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கோணங்களில் நின்று பேசி வருவதனால் பல பிரச்சினைகளும் கருத்து முரண்பாடுகளும் ஏற்பட்டு வருகின்றன. ஆகவே சரியான கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். அதற்கு முன்னோடியாக கூட்டமைப்பு பதிவு செய்யப்பட வேண்டுமென்று கோரி வருகின்றோம்.

இன்று எஞ்சியுள்ள ஒரேயொரு ஆயுதம் மக்கள் ஆதரவாகும். நாம் பலகோணங்களில் நின்று கொள்வோமானால் அவர்களது ஆதரவை எம்மால் தக்க வைக்க முடியாது. அவர்களது பலத்தையும் ஆதரவையும் இழந்து விடக்கூடிய நிலை உருவாகி விடும். எனவே தான் சரியான செயற்திட்டத்தின் கீழ் ஒரே அமைப்பாக செயற்பட கூட்டமைப்பை கட்சியாக மாறுவதன் மூலமும், பதிவு செய்வதன் மூலமே வெற்றிகொள்ள முடியும் என்றார்.

## தென்மராட்சி கல்வி வலயத்தில் 3 நிலையங்களில் ஆங்கில தேர்ச்சி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் - 3, 4, 5 வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான ஆங்கில தேர்ச்சிகள் 3 மத்திய நிலையங்களில் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப்பாடசாலை ஆகிய இடங்களில் நடைபெறும் செயற்பாட்டிற்கு தென்மராட்சி ஆரம்கல்விப் பிரிவினரால் வெளியிடப்பட்ட ஆங்கில சொற்களஞ்சியத்திலிருந்து வினாக்கள் கொடுக்கப்படும்.

எனவே குறித்த மாணவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட நிலையங்களுக்கு உரிய நேரத்துக்கு சமுகம் தந்து தேர்ச்சிகளில் பங்குபற்றுமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனையின் ஆரம்பக் கல்விப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (11)

## மரங்கள் திருட்டு

வடக்கு வரணிப் பிரதேச வனப்பகுதியில் விறகுகளாகவும் கம்பிக்கட்டைகளுக்காகவும், மிகவும் பயனுள்ள பொற்பத்தை மற்றும் கண்டல் மரங்களை பொதுமக்கள் மற்றும் சைக்கிள் வியாபாரிகள் திருட்டுத்தனமாக வெட்டி கொண்டு செல்வதும் மாட்டு வண்டிகளில் ஏற்றி வருவதும் அண்மை நாட்களாக அதிகரித்துள்ளது. இச்செயற்பாடு தொடர்ந்தும் இடம்பெற்றுவருகிறது.

குறிப்பாக சாளம்பை, கப்பத்தை, குடத்தனை வீதி வனப்பகுதியில் இப்படிப்பட்ட திருட்டு மரம் வெட்டுதல் இடம்பெறுகின்றமை குறிப் பிடத்தக்கது.(150)

# போக்குவரத்து வசதி வழங்குவதாக உறுதியளிப்பு

(வவுனியா)

வவுனியா - மதுராநகர் மற்றும் சேமமடு கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி அப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவையைப் பூர்த்திசெய்யுமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியாசாலை முகாமையாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கல்நாட்டியகுளம், மதுராநகர் மற்றும் சேமமடு கிராமங்கள் நீண்டகாலமாக போக்குவரத்து வசதிகளற்றுக் காணப்பட்டன. இதனால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள் உட்பட பலர் போக்குவரத்து அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இதனையடுத்து, இலங்கை போக்குவரத்துச்சபையின் வவுனியா சாலை முகாமையாளருடன் தொடர்பு கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், இவ்வேண்டுகோளை முன்வைத்தார்.

இவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை முகாமையாளர், இரு கிராமங்களுக்கும் பேருந்து வசதியை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். (160)

## மதுபானம் கடத்திய இருவர் கைது

(கொழும்பு)

உள்நாட்டு, வெளிநாட்டு மதுபானத்தை கடத்திய குற்றச்சாட்டின் பேரில் காதலர்களான இந்திய ஆணொருவரும் இலங்கைப் பெண்ணொருவரும் ஹட்டன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களைப் பற்றிக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இரகசிய பொலிஸார் ஒருவர் இவர்களிடம் மதுபானம் வாங்குபவர்போன்று நடித்து இவர்களை பொலிஸ் வலையில் சிக்கவைத்துள்ளார். இவர்கள் 79 வெளிநாட்டு ஜின் போத்தல்களையும் 212 உள்நாட்டு மதுப்போத்தல்களையும் விநியோகிக்க வந்தபோது கைது செய்யப்பட்டனர்.

விசாரணையின்போது இவர்கள் காதலர்களெனத் தெரியவந்துள்ளதோடு, இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் ஆயத்தங்களையும் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

## சிறுவர்களுக்கு புகைப் பொருட்கள்; வரணி வர்த்தகர்கள் சிக்கினர்

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை 21 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கு சிகரட் விற்பனை செய்த வர்த்தகர்கள் மதுவரித் திணைக்களத்தினரிடம் சிக்கிக் கொண்டனர்.

21 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கு புகைப் பொருட்களை விற்பனை செய்ய வேண்டாமென மதுவரித் திணைக்களத்தினர் தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றனர்.

ஊடகங்களில் அடிக்கடி புகைப் பொருட்களை வயது குறைந்தவர்களுக்கு விற்பனை செய்தவர்கள் நீதிமன்றில் குற்றப்பணம் செலுத்தி வருவதாக செய்திகள் வெளியாகின்ற போதும் இவ்வாறான செயல்கள் தொடர்ந்து நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (150)

# கூட்டமைப்பின் பதிவும், அதன் முறிவும்


**■ த. கடலவன்**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இதுவரை ஒரு அரசியல் கட்சியாக பதிவுசெய்யப்படாமல் பேரளவில் மட்டும் கூட்டமைப்பாக இருக்கின்ற போதிலும் உள்ளூகத்தில் பல்வேறு மோதல்கள், சர்ச்சைகள் என்பனவற்றை உள்ளடக்கிய ஒரு கூட்டமைப்பாகவே இருந்து வருகிறது. கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்ற ஒவ்வொரு கட்சியும் தத்தமது கட்சியை முன்னிலைப்படுத்தி தத்தமது வளர்ச்சிக்காக பல்வேறு விதமான நடவடிக்கைகளை கடந்த காலங்களில் மேற்கொண்டு வந்தமையை நாம் அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழர்

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தற்போது பெரியள விலான பிளவு ஒன்று ஏற்பட்டுள்ளது. இப்பிளவானது கட்சிப்பதிவென்ற தோரணையில் மேலும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. சுரேஸ் எடுத்திருக்கும் காவடி தொடர்ந்து ஆடவேண்டிய காவடியாகவே இருக்கப்போகின்றது. இக்காவடியை இறக்குவதற்கு சம்பந்தன் ஒருபோதுமே இடம் கொடுக்கமாட்டார். சுரேஷ் தனி ஓட்டம் மட்டுமே ஓடவேண்டிய நிலையில் தற்போது உள்ளார்.**

விடுதலைக் கூட்டணி, புளொட் போன்ற கட்சிகள் தனித்தனியாக தமது கட்சி மாநாடுகளைக் கூட்டியதுடன், தனித்தனியாக கட்சிக்குரிய அங்கத்தவர்களையும் தெரிவு செய்து வந்தனர். ஆனால் தமிழரசுக் கட்சி மற்றைய கட்சிகளை விட மேலும் ஒருபடி மேலே சென்று தனது கட்சி மாநாட்டையும் பொதுக்கூட்டத்தையும் பல தடவைகள் நடத்தியதுடன் மட்டும் நிற்காமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவுசெய்ய உடன்படுவதில்லை என்ற இரகசியத் தீர்மானத்தையும் எடுத்து, தமிழரசுக் கட்சியில் ஏனைய கட்சிகளையும் இணைந்து செயற்பட வைக்கவேண்டுமெனவும் கூட்டமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் தமிழரசுக் கட்சிக்கே முக்கியத்துவம்கொடுக்க வேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றியது.



அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் தனித்துப் போட்டியிடுவதென கட்சியின் தலைவர் சம்பந்தன் கருத்து வெளியிட்ட வேளையில், இதனை மறுதலித்துக் கருத்துச் சொன்ன நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனை சம்பந்தன் கடுமையான தொனியில் எச்சரித்தார். ஸ்ரீதரனுக்கு அரசியல் முதிர்ச்சி இல்லையெனவும் ஸ்ரீதரன் தனி ஓட்டம் ஓடுவதாகவும், ஸ்ரீதரன் விரும்பினால் கஜேந்திரனுடன் இணைந்து அரசியல் செய்யலாமெனவும் தமக்கு அதில் ஆட்சேபனை இல்லை எனவும், சம்பந்தன் எரிந்து விழ அதன்பின்னர் ஸ்ரீதரன் அடங்கிப் போய்விட்டதாகக் கூறப்படுகிறது.

ஒட்டுமொத்தத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது பேரளவில் மட்டுமே இருக்கின்ற ஒரு கட்சியாக உள்ளபோதும், இக்கட்சியைப் பதிவுசெய்ய ஒருபோதுமே சம்பந்தன் இடம் கொடுக்கமாட்டார் என்பது முடிந்த முடிவாகும். இந்த நிலையில் அங்கத்துவக் கட்சிகள் என்று கூறிக்கொண்டு கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டுமென்று ஒரு அழுத்தத்தை சுரேஸ் தலைமையில் தற்போது கொடுத்து வருகின்றனர். இறுதியாக இது தொடர்பில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் த. சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கைச்சாத்திட்ட கடிதமொன்று இரா.சம்பந்தனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

“தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை ஒரு பொதுவான யாப்பின் அடிப்படையிலான கட்டமைக்கப்பட்ட கட்சியாகப் பதிவு செய்ய வேண்டியதன் அவசியம் பற்றி நீண்டகாலமாக உள்ளார்ந்த கருத்தாடல்களை முன்னர் அதன் அங்கத்துவக் கட்சிகளாக இருந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்,எவ்) தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஆகியன தங்களுடன் மேற்கொண்டு வந்தமையை நீங்கள் அறிவீர்கள். இதனடிப்படையில் 2011ஆம் ஆண்டு தை மாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் தேர்தல்கள் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டமையும் தாங்கள் அறிந்ததே. இப் பதிவுக்காக தேர்தல் ஆணையகம் அங்கத்துவக் கட்சிகளின் ஒப்புதல் கடிதத்தை கோரியிருந்தமையும் பதினைந்து மாதங்களாகத் தமிழரசுக் கட்சி அத்தகைய ஒப்புதல் கடிதத்தினை வழங்க தாமதம் செய்ததால் பதிவிற்கான விண்ணப்பம் 2012ஆம் ஆண்டு நிராகரிக்கப்பட்டமையும் தங்களுக்குத் தெரிந்ததே.

எனவே பதிவு தொடர்பான கருத்தாடல்கள் கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முந்தைய அண்மைய விடயமல்ல என்பதைத் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறோம். தமிழ் மக்களை அதிகபட்சம் ஒற்றுமைப்படுத்தி இறுக்கமாகக் கட்டமைக்கப்பட்ட ஒரு தலைமையின் கீழ் கொண்டுவர வேண்டிய தேவை புலிகள் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் பல மடங்கு அவசியமாகின்றது என்பதையும் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறோம். புலிகளுக்குப் பின்னர் காத்திரமான தலைமை எமக்கு இருக்கின்றதா என்று விரக்தியடைந்த மக்களின் எதிர்காலம் குறித்த சந்தேகத்தைப் போக்கி, அவர்களுக்கு நம்பிக்கையை வளர்த்து உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கும் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்மீது சுமத்தப்பட்டது. அவ்வாறான ஒரு கூட்டமைப்பு அதற்குப் பொருத்தமான கட்டமைப்புக்களுடன் பதிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பாக இருந்தால் மட்டுமே எமது மக்களின் பூரண நம்பிக்கையைப் பெறவும் சர்வதேசத்துடனான முறையான தொடர்பாடல்களை பேணவும் வளர்த்தெடுக்கவும் முடியும். மேலும் எமக்குப் பொருத்தமான தீர்வை நோக்கி செயலாற்றவும் ஏதுவாக இருக்கும்.

ஆனால், நாம் கூட்டமைப்பாகச் செயற்படத் தொடங்கி பத்தாண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், இதுவரை அவ்வாறான ஒரு வடிவத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லை என்பதே யதார்த்தமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அதற்கான கட்டமைப்புக்களுடன் கூடிய ஓர் அரசியல் கட்சியாகப் பரிணமித்திருக்குமாயின், நாம் இப்பொழுது முகம் கொடுக்கின்ற பல்வேறு விமர்சனங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும் என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். கூட்டமைப்பை பதிவு செய்வதில் சட்ட பூர்வமான சிக்கல் இருக்குமென எமக்குத் தெரிவிக்கப்பட்டபோது, பதிவு செய்வதில் தடைகள் இருக்குமென்றால், ஒரு கட்சி தன்னுடைய பெயரையும் யாப்பையும் மாற்றியமைப்பதனூடாக கூட்டமைப்பைப் பதிவு செய்யலாம் என்றும் இதற்கு எந்த ஒரு கட்சியும் முன்வராத பட்சத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தனது பெயரை மாற்றியமைக்க தனது கட்சியின் அனுமதியைப் பெற்றுத்தர தயாராக இருந்ததாக சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார் என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறோம். அதுமட்டுமன்றி, தமிழ்மக்களின் நன்மைகருதி நாம் அனைவரும் ஒரே கட்சியாக செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

இப்பொழுது கிழக்குமாகாணத் தேர்தல் முடிந்துவிட்டமையினால் கட்சியாகப் பதிவுசெய்யும் வேலையை விரைவாக செய்து முடிக்கமுடியுமென நாம் எதிர்பார்க்கின்றோம்” என சம்பந்தனுக்கு அனுப்பப்பட்டுள்ள அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு சகல அதிகாரங்களும் அடங்கிய கௌரவமான ஒரு அரசியல் தீர்வு ஏற்படுத்தப்படவேண்டும் என்பதற்காகவே நாம் ஐக்கியப்பட்டிருக்கின்றோம் என தமது ஒற்றுமைபற்றி கடிதத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், கூட்டமைப்புக்குள் ஐக்கியம் என்பது பூச்சியமாகவே இருந்து வருவது யாவருமறிந்ததே. குறித்த கடிதத்தில் செல்வம் அடைக்கலநாதன் வேண்டா வெறுப்புடன் கையொப்பமிட்டதாகவும், கையொப்பமிட்ட உடனேயே மாவை சேனாதிராசாவைச்சந்தித்து, தமிழரசுக்கட்சியின் முடிவே தனது முடிவு எனவும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் தான் கையொப்பமிட்டதாகவும் தான் என்றைக்குமே தலைவர் சம்பந்தனுக்கு விசுவாசமாக இருப்பேன் எனவும் செல்வம் கூறியுள்ளார். இவ்வாறு புளொட் தலைவர் சித்தார்த்தனும் மாவை சேனாதிராசாவைச் சந்தித்து தனக்கு தமிழரசுக் கட்சியும் ஒன்றுதான் கூட்டமைப்பும் ஒன்றுதான் எதில் இருந்தாலும் தனக்குப் பிரச்சினை இல்லை என்று கூறியதாகவும் தமிழரசுக்கட்சி வட்டாரத்தில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

தற்போது சுரேஸுடன் உறுதியாக நிற்பவர் ஆனந்தசங்கரி மட்டுமே ஆகும். ஆனந்தசங்கரியும் தக்க நேரத்தில் குத்துக்கரணம் அடிக்கக் கூடிய நிலையிலேயே உள்ள ஒருவராவர். ஒட்டு மொத்தத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தற்போது பெரியளவிலான பிளவு ஒன்று ஏற்பட்டுள்ளது. இப்பிளவானது கட்சிப்பதிவென்ற தோரணையில் மேலும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. சுரேஸ் எடுத்திருக்கும் காவடி தொடர்ந்து ஆடவேண்டிய காவடியாகவே இருக்கப்போகின்றது. இக்காவடியை இறக்குவதற்கு சம்பந்தன் ஒருபோதுமே இடம் கொடுக்கமாட்டார். சுரேஷ் தனி ஓட்டம் மட்டுமே ஓட வேண்டிய நிலையில் தற்போது உள்ளார்.

வரப்போகும் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று ஒரு சாராரும், தமிழரசுக்கட்சி என்று இன்னுமொரு சாராரும் போட்டியிடுவதற்கான தயாரிப்புகளைச் செய்து வருகின்றனர். இதற்கான ஆள்பிடிப்பு வேலைகளும் தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளன. ஒட்டு மொத்தத்தில் கூட்டமைப்பின் உடைவு என்பது தற்போது உறுதியாகிவிட்டது.



# மக்கள் சேவைக்கு தடையான சட்டங்கள் திருத்தப்படவேண்டும்



(கொழும்பு)

மக்கள் சேவைக்கு தடையாக அமைந்துள்ள சகல சட்டங்களிலும் திருத்தம் செய்யப்பட வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2013ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் தொடர்பில் கருத்து கோரும் நோக்கில் நடைபெற்ற சந்திப்பொன்றின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு சில சட்டங்களினால் இடையூறு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சட்டங்களைக் கண்டறிந்து அவற்றில் திருத்தம் செய்யப்பட வேண்டியது அவசியமானது.

மக்கள் ஆணைக்கு புறம்பாக செயற்பட எவருக்கும் உரிமை கிடையாது.

நாட்டின் அபிவிருத்திக்காக அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## வீட்டு முற்றத்தில் மண்டையோடு



அக்கரைப்பற்று - ஆலையடி கோபால் கடைவீதியிலுள்ள வீடொன்றின் முற்றத்தில் மண்டையோடு ஒன்று வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 8.45மணியளவில் கிடைத்த தகவலுக்கு அமைய அக்ரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

அக்கரைப்பற்று-பொத்துவில் வீதியிலுள்ள மயானம் ஒன்றிலிருந்து மண்டையோடு தோண்டி எடுக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் மண்டையோடு வைக்கப்பட்டுள்ளதாகவும் மண்டையோட்டை குறித்த இடத்தில் வைத்த இளைஞன் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## திருடனை தண்டித்த தமிழ் டாக்டரின் கார்க்கதவு

(கொழும்பு)

கொழும்பு-பொரளையில் தமிழ் டாக்டர் ஒருவரிடம் தாலிக்கொடியை திருட முற்பட்ட பிச்சைக்காரன் ஒருவனை மின்னியக்க சாதனம் பிடித்துக் கொடுத்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

பொரளையிலுள்ள முச்சந்தி ஒன்றில் பயணித்த தமிழ் பெண் டாக்டர் ஒருவர் தனது காரை நிறுத்திய போது ஒரு பிச்சைக்காரன் ஜன்னலைத் தட்டி பிச்சை கேட்டதைப் பார்த்த அந்தப் பெண டாக்டர் அவனுக்கு 10 ரூபாவை ஜன்னலைத் திறந்து கொடுக்க முற்பட்டார்.

அப்போது அந்த பிச்சைக்கார திருடன் அப்பெண்மணியின் கழுத்தில் இருந்த தங்கத் தாலிக்கொடியைப் பிடித்து அறுததுச்செல்ல முயற்சித்தான். அப்போது மதிநுட்பம் மிக்க அந்தப் பெண் டாக்டர் தனது காரின் power windows ஐ அவன் எதிர் பார்க்காதபோது திடீர் என்று அழுத்தி மூடிவிட்டார்.

இதனால் தப்பியோட முடியாமல் கார் ஜன்னலில் சிக்கியிருந்த கையை விடுவிக்க முடியாமல் திருடன் வேதனையில் புலம்பிக்கொண்டிருந்த போது அருகில் இருந்த பொலிஸார் அவனைக் கைது செய்தனர்.



செய்த குற்றத்துக்கு எனது வாகனம் அவனைத் தண்டித்து விட்டது எனக்கு பொலிஸ் நிலையத்துக்கும் நீதிமன்றத்துக்கும் செல்ல நேரம் இல்லை, அவனை கடுமையாக எச்சரித்து விடுவியுங்கள் என்று கூறிவிட்டு அந்த டாக்டர் சென்றுவிட்டார்.

## வாழ்க்கைச் செலவு சுட்டெண் வர்த்தமானியில் வெளியிட வேண்டும்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு சுட்டெண் வர்த்தமானியில் அறிவிக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. வாழ்க்கைச் செலவு சுட்டெண் தொடர்பில் வர்த்தமானியில் அறிவிப்பதன் மூலம் உழைக்கும் வர்க்கத்தினர் நன்மை அடைவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு சுண்டெண்ணில் சம்பளங்கள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வாழ்க்கைச் செலவு புள்ளி மாறும் தன்மையுடையவது.

வாழ்க்கைச் செலவு புள்ளி தொடர்பான தகவல்களை வெளியிடுவது மிகவும் அவசியமானது.

எனினும் ஆளும் கட்சி அமைசசர்கள் வாழ்க்கைச் செலவு புள்ளி தொடர்பில் தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்க முடியாது. ஊழியர் சேமலாப நிதி தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்த விரும்புவதாக 21 தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், ஜனாதிபதி அதற்கு சாதகமான பதில்கள் எதனையும் அளிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொலைக்கான காரணவாதிகள் இதுவரை தண்டிக்கப்படவில்லை

(கொழும்பு)

தந்தை கொல்லப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ளது. எனினும் அந்தக் கொலைக்கான காரணவாதிகள் தண்டிக்கப் பட்வில்லை என படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிகா தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் கொலை செய்தவர்கள் இன்னும் பிரசித்தமாக இருக்கின்றனர் என்று கடந்த ஒக்டோபர் 8 ஆம் திகதி 2011 ஆம் ஆண்டு கொலன்னாவையில் கொல்லப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் மகள் ஹிருணிகா குற்றம் சுமத்தியுள்ளார்.

அவரின் கொலை தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசாரணைகள் மற்றும் ஏனைய விடயங்கள் இன்னும் திருப்தியைக் காட்ட வில்லை.

தந்தையின் கொலை விடயத்தில் சட்டங்கள் இன்னும் உரிய முறையில் செயற்படாநிலையில் அவரின் வெற்றிடம் காரணமாகவே தமது குடும்பம் பாரிய பாதிப்புக்கு உள்ளாகியுள் ளதாகவும் ஹிருணிகா தெரிவித்துள்ளார்.

## எண்ணெய் அகழ்வில் மலேசிய நிறுவனம்

(கொழும்பு)

மலேசிய அரசாங்கத்தின் எரிபொருள் நிறுவனமான பெற்றோனஸ் (Petronas) இலங்கையில் எண்ணெய் ஆய்வுகளில் ஈடுபடவுள்ளது.

பாக்கு நீரிணையின் மன்னார் கடற்பகுதியில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மலேசிய அரசாங்கத்தின் உதவியுடன் இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இதன்படி மலேசிய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் இணைந்து எண்ணெய் ஆய்வுப்பணி மற்றும் அகழ்வுகளில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி குவைத் விஜயம்

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 13ஆம் திகதி குவைத் நாட்டிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

குவைத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஆசிய கோப்ரேட் டயலொக் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே அவர் செல்லவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது குவைத்தின் அரச தலைவர்களுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

ஆசிய கோப்ரேட் டயலொகின் மாநாடு கடந்த 2009ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்றதுடன் ,சுமார் ஒன்றரை வருடங்கள் இந்த அமைப்பின் தலைவராக ஜனாதிபதி செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் தமிழ்க்கூட்டமைப்பு அல்ல

(கொழும்பு)

தெரிவுக்குழுவில் கலந்துகொள்ள கூட்டமைப்பு ஏன் தயக்கம் காட்டுகின்றது என்று தெரியவில்லை என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருவதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கமும் பேச்சு நடாத்துவதில் அர்த்தம் இல்லை. யதார்த்தமான தீர்வைக் காணவேண்டுமாயின் தமிழ்க் கூட்டமைப்பு சகல கட்சிகளும் கலந்துகொள்ளும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கே வரவேண்டும்

தமிழ்க் கூட்டமைப்பை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று கூறமுடியாது. மேலும் தீர்வு விடயத்தில் புலிகள் அமைப்பு கொண்டிருந்த நிலைப்பாட்டையே தமிழ்க் கூட்டமைப்பும் கொண்டுள்ளது.

இது தீர்வு முயற்சிக்கு ஆரோக்கியமானதல்ல. புலிகள் ஆயுதம் மூலமாக பெற முயற்சித்ததை தமிழ்க் கூட்டமைப்பினர் வேறு வடிவங்கள் ஊடாக பெற முயற்சிக்கின்றனர். ஆனால் அந்த முயற்சி நிறைவேறாது. தீர்வு வேண்டுமாயின் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவே சிறந்த இடமாகும் என்றும் அவர் கூறினார்.

## அவுஸ்ரேலியாவுக்குள் நுழைந்தவர்களை மானூஸ் தீவுகளுக்கு அனுப்ப ஏற்பாடு

சட்டவிரோதமான படகுகள் மூலம் அவுஸ்ரேலியாவுக்குள் நுழைந்தவர்களை பப்புவா நியூகினியின் மானூஸ் தீவுகளுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் ஒரு வார காலத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என அவுஸ்ரேலியா அறிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் படகுகள் மூலம் அவுஸ்ரேலியாவுக்குள் நுழைந்து கிறிஸ்மஸ் தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை நவுறு மற்றும் பப்புவா நியூகினி தீவுகளுக்கு அனுப்பும் நடவடிக்கையை அவுஸ்ரேலியா ஆரம்பித்துள்ளது. இவர்களில் சிலர் நவுறு தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த கட்டமாக பப்புவா நியூகினியின் மானூஸ் தீவுகளுக்கு அனுப்பும் பணிகள் ஒரு வார காலத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என அவுஸ்ரேலிய குடிவரவு, குடியகல்வுத்துறை அமைச்சர் கிறிஸ் பொவன் தெரிவித்துள்ளார்.

பப்புவா நியூகினிக்கு அனுப்பப்படுபவர்களைத் தங்க வைப்பதற்கான அடிப்படை வசதிகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பதாவும், ஒரு வாரத்துக்குள் முதல் தொகுதியினர் அங்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

மானூஸ் தீவில் தங்கவைக்கப்படவுள்ளவர்களுக்கான வசதிகள் குறித்து இரு நாடுகளும் இணைந்து செயற்படுவதாகச் சுட்டிக்காட்டிய அவர், ஒரு வாரத்துக்குள் முதல் தொகுதியினரை அனுப்ப முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

பப்புவா நியூகினி தீவுக்கு விஜயம் செய்திருந்த அவுஸ்திரேலியாவின் குடிவரவு, குடியகல்வுத்துறை அமைச்சர் கிறிஸ் பொவன், அந்நாட்டின் பிரதமரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அதேநேரம், 18 இலங்கையர்களும் 14 ஆப்கானிஸ்தானியர்களும் கடந்த வெள்ளிக்கிழமை கிறிஸ்மஸ் தீவிலிருந்து, நவுறு தீவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இதுவரை 181 பேர் நவுறு தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.



அதேவேளை அவுஸ்ரேலியாவுக்கு படகுகள் மூலம் சட்டவிரோதமாகச் செல்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்தே வருகிறது. கிறிஸ்மஸ் தீவில் தங்க வைக்கப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிப்பதால், இடநெருக்கடி காரணமாக கலவரங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக கிறிஸ்மஸ் தீவின் நிர்வாக அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

2011ஆம் ஆண்டு தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்கள் கலவரத்தில் ஈடுபட்டிருந்ததை நினைவு கூர்ந்த அவர், இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரித்திருப்பதாகவும் எச்சரித்துள்ளார்.

# சொந்தக் காணிகள் இன்மையால் கைநழுவிச் செல்லும் வீட்டுத்திட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த வத்திராயன் கிராம மக்களுக்கு 125 நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க சுவீடிஷ் அபிவிருத்திச் சபை (S.D.C) முன்வந்துள்ள போதிலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு காணிகள் இல்லாத காரணத்தினால் வீடமைப்புப் பணிகள் தாமதமாகலாம் எனத் தெரியவருகிறது.


சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இக கிராம மக்களுக்கு க்டற்கரையில் இருந்து தெற்குப் பக்கமாக 600 மீற்றர் தூரத்தில் அரசாங்கக் காணியெனக் கூறி ஒவ்வொரு குடும்பத்துக்கும் இரண்டு பரப்புக் காணி வழங்கப்பட்டது. காணிகள் பெற்றவர்கள் தமது காணிகளுக்கு வேலிகள் அடைத்து கிணறு. மலசலகூடம் என்பனவற்றை அமைத்ததுடன் பயன்தரு மரங்களையும் நாட்டியிருந்தனர். வீடமைக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் காணிகளுக்கிடையில் உள்ளக வீதிகளை அமைத்ததுடன் நிரந்தர வீடுகள் அமைக்கும் ஆரம்ப பணிகளையும் மேற்கொண்டிருந்தனர்.

அந்நாட்களில் இப்பிரதேசத்தில் ஆரம்பமான போர் நடவடிக்கைகள் காரணமாக மக்களின் இடப்பெயர்வுடன் வீடமைக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது பணிகளை முடிவுறுத்தியிருந்தனர்.

மீளக் குடியமர்ந்த இக்கிராம மக்கள் தமது காணிகளைத் திருத்தி குடியிருந்தனர். இவ்வேளை தனியார் ஒருவர் இக் காணிகள் முழுவதும் தமக்குச் சொந்தமானதெனவும் இக் காணிகளில் யாரும் குடியிருக்கக் கூடாதெனவும் கூறியமையால் மக்களிடையே ஒரு குழப்ப நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீளக் குடியமர்ந்து இரண்டு வருடங்கள் முடிவடைந்து தற்காலிக வீடுகளோ நிரந்தர வீடுகளோ இது வரை கிடைக்காத நிலையில் சுவீடிஸ் அபிவிருத்திச் சபை (SLC) 125 நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு முன் வந்தபோதும் காணிகள் இல்லாத காரணத்தினால் தாம் வீடமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

எனவே, தமக்கு வீடு அமைப்பதற்குரிய காணிகளைப் பெற்றுத் தருவதற்குரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளவேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (70)



மானிப்பாய் ஆலடி முன்பள்ளியின் சிறுவர் தினவிழாவில் மானிப்பாய் பொலிஸ் நிலைய பெண் பொலிஸ் அதிகாரி மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம். (104)

## உதவிக்கல்விப்பணிப்பாளர் ஓய்வு

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயத்தில் உதவிக்கல்விப்பணிப்பாளராக ஒன்பது வருடங்கள் சேவையாற்றிய திருமதி சேமலதா கந்தசாமி சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

இவர் 1982 ஆம் ஆண்டு தமது ஆசிரியர் சேவையை அநுராதபுரம் ஷாகிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து மதவாச்சி மகா வித்தியாலயம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் 2003 ஆம் ஆண்டு வரை ஆசிரியர் சேவையாற்றி 2003 முதல் 2012 வரை தென்மராட்சி கல்வி வயலத்தில் விஞ்ஞான பாட உதவிக் கல்விப்பணிப்பாளராகச் சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (11)

## அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை, சின்னமடு, புளியங்கூடல் பொது மக்களின் நீண்ட கால கோரிக்கைக்கு அமைவாக பொது நூலகத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் ஊர்காவற்துறை பிரதேச தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் கலந்து அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் பிரதேச சபையின் பதில் தவிசாளர், உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள், வங்கி முகாமையாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதற்கான நிதி 750,000 ரூபா மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து கிடைக்கப் பெற்றது. மேலும் இப்பகுதியில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டிற்கான 3 ஆம் கட்ட வேலைத்திட்டத்தில் சுமார் 120 இலட்சத்துக்கு மேற்பட்ட தொகையில் வீதிப்புனரமைப்பு நடைபெற்றுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அதிபர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந் துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## விசேட கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக உட்படுத்தற் கல்வித்துறையினால் நடத்தப்படும் விசேட கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பார்வைக் குறைபாடு, கேட்டல் குறைபாடு, உடலியற்குறைபாடு மந்த நிலை, ஓட்டிசம் நிலை வேறு கற்றற்தரக் குறைபாடுகளால் ஏற்படுகின்ற கற்றற் பிரச்சினைகள் மற்றும் விசேட கல்வித் தேவைகளை இனங்கண்டு அவற்றை விருத்தி செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வழங்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தும் ஒரு வருட பகுதி நேரப் பாடநெறியாகும்.

இப்பாட நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர், உட்படுத்தற் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு அறி விக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களை தினமுரசு காரியாலயத் தில் பார்வையிடலாம்.

## இணுவில் கந்தசுவாமி கோயில் நவராத்திரி தின பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையானது சைவச்சிறார் களிடையே இந்து சமய அறிவையும், பேச்சு வன்மையையும் விருத்தி செய்யும் நோக்கத்துடன் நவராத்திரி தினத்தை முன்னிட்டு ஆண்டு தோறும் பேச்சுப் போட்டியை நடத்தி வருகிறது. அந்த வகையில் இம்முறை இந்தப் போட்டியில் ஒவ்வொரு பாடசாலை மாணவர்களையும் பங்குபற்றுவதற்கு தயார் செய்து பண்பாட்டு உடையில் அனுப்புமாறு பாடசாலை அதிபர்களை ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இப்போட்டிகள் இணுவில் கந்தசுவாமி கோயில் சைவப்பணிமனை இளந்தொண்டர் சபையில் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறும்.

கீழ்ப்பிரிவு தரம் 4, 5 மாணவர்கள். வழங்கப்படும் நேரம் 5 நிமிடங்கள். "அருள்தரும் அன்னை", "முப்பெரும் தேவியர்" எனபதில் விரும்பிய தலைப்பினிலும், மத்திய பிரிவு தரம் 6, 7, 8 மாணவர்கள், வழங்கப்படும் நேரம் 7 நிமிடங்கள். "கம்பரும் சரஸ்வதியும்", "சக்தியைப் போற்றும் சான்றோர்" என்னும் தலைப்பினிலும்,

மேற்பிரிவு தரம் 9, 10, 11 மாணவர்கள். வழங்கப்படும் நேரம் 10 நிமிடங்கள். "சர்வம் சக்தி மயம்", "சக்தியைப் போற்றும் சால்பு பனுவல்கள்" என்ற தலைப்பிலும் அமைதல் வேண்டும்.

இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறுபவர்களுக்கு 24 ஆம் திகதி புதன்கிழமை விஜய தசமி அன்று தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்படும்.

பங்குபற்றும் மாணவர்கள் விண்ணப்பங்களைத் தயார் செய்து பூர்த்தி செய்து ரூபா 30.00 கட்டணத்துடன் 17 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் செயலாளர், சைவப் பணிமனை, இளந்தொண்டர் சபை இணுவில் கந்தசுவாமி கோயில், இணுவில் என்ற முகவரியில் ஒப்படைக்க வேண்டும்.

விண்ணப்பத்தில், முழுப்பெயர், பிறந்த திகதி, கல்வி கற்கும் தரம், கல்வி கற்கும் பாடசாலை, சொந்த முகவரி என்பவற்றைக்குறிப்பிட்டு இவ் விபரங்கள் யாவும் சரியானவை என உறுதிப் படுத்துகின்றேன் எனக் கையொப்பம் இடவேண்டும்.

இந்த விண்ணப்பத்தில் பெற்றோர் அல்லது பாதுகாவலர், பாடசாலை அதிபர் அல்லது கல்வி கற்கும் நிறுவன பொறுப்பாளர் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## முரசின் இன்றைய பலன்

(09.10.2012 - செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 23 ஆம் திகதி.
நட்சத்திரம்: புனர்பூசம் முற்பகல் 9.55 வரை. பின் பூசம்.
சித்தயோகம். நவமி முன்னிரவு 11.18 வரை.
இராகுகாலம் 3.02 - 4.32 வரை. சுபநேரம் 10.32 - 12.02 வரை
எமகண்டம் 09.02 - 10.32 வரை, குளிகன் காலம் 12.02 - 1.32 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தொழிலில் நிலுவைப்பணி நிறைவேறும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். உடல் நலம் சீராகும். போக்குவரத்தில் கவனம். நண்பர் சந்திப்பு. |
| ரிஷபம் | நீண்டநாள் தொல்லை மறையும். உதவி கேட்டு வருவர். கூடுதல் வேலை இருக்கும். உபரி பணவருமானம். வெளியூரிலிருந்து சுப செய்தி. குடும்ப அமைதி. |
| மிதுனம் | கேட்கிற உதவி கிடைக்கும். உற்சாகமுடன் செயறபடுவீரகள். தொழிலில் மாற்றம். தாராள பணவருமானம். சேமிப்பீர்கள். வீட்டுப்பொருள் வாங்குவீர்கள். விருந்து. |
| கடகம் | நியாய, தர்மம் பின்பற்றுவதால் நன்மை. தொழில் சீராக இருக்கும். அளவான பணவரவு. சிக்கனம் நல்லது. இசை இரசிப்பு. மனதில் புத்துணர்வு. குடும்பத்தில் இன்பம். |
| சிம்மம் | செயல்களில் திறமை. வெற்றி தேடிவரும். தொழில் இலக்கு நிறைவேறும். உபரி பணவருமானம். இல்லறத் துணை வழி உறவினர் உதவி. தேவை நிறைவேறும். |
| கன்னி | பிறருக்கு உதவுவீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை. கூடுதல் பணவரவில் குடும்பத் தேவை நிறைவேறும். பூர்வ சொத்தால் வரவு அதிகரிக்கும். பயண வாய்ப்பு. |
| துலாம் | அவதூறு வரும். நம்பிக்கையை வளர்ப்பது நல்லது. பணிச்சுமை அதிகரிக்கும். அளவான பணவரவு. மருத்துவ செலவு. பொருட்களை பாதுகாக்கவும். வீண் கவலைகள் வாட்டும். |
| விருச்சிகம் | பணி தாமதமாகும். கோபம், சச்சரவு தவிர்க்கவும். அதிக உழைப்பு. பணவரவு சுமார். வழிபாடு மன அமைதிக்கு உதவும். பயணத்தால் பயன். |
| தனுசு | அவசரப்பணி உருவாகி மனதில் குழப்பம். தொழிலில், மாற்று உபாயம் தேவை. பணவரவு தாமதம். வாகன பயணத்தில் கவனம். பொருள் இழப்பு. ஆதரவு. |
| மகரம் | அன்பு நிறைந்த நாள். பணிகளில் வெற்றி. தொழில் வளர்ச்சி. உபரி வருமானம். குடும்ப உறுப்பினர்கள் மகிழ்வு. சுப நிகழ்ச்சி திட்டமிடல். |
| கும்பம் | பேச்சில், செயலில் கலகலப்பு. சமூகத்தில் அந்தஸ்து உயர்வு. சுயமுயற்சியினால் தொழில் வளர்ச்சி. பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். |
| மீனம் | அனுசரணையும் உதவியும் கிடைக்கும். திட்டமிட்டவை சிறப்பாக நிறைவேறும். தொழிலில் கூடுதல் முயற்சி. கூடுதல் இலாபம். குடும்பத்தில் மங்கல நிகழ்வு. |

# தோல்விக்குப் பரிகாரம்



(கொழும்பு)

உலகக் கிண்ண ருவென்ரி-20 இறுதிப் போட்டியின் தோல்விக்குப் பொறுப்பேற்று, ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியின் கப்டன் பதவியிலிருந்து நான் விலகுகிறேன். அப்போதுதான் என்னால் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பாக விளையாட முடியும் என இலங்கை அணிக் கப்டன் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.


கப்டன் பதவியைத் துறப்பது குறித்து முன்னரே தேர்வாளர் குழுவுடன் நான் பேசினேன். இந்த உலகக் கிண்ணப் போட்டிக்கு பின்னர் கப்டன் பதவியை விட்டு விலகுவது என்ற முடிவிலேயே நான் இருந்தேன். எமது அணி தற்போது நன்றாக விளையாடி வருகிறது என்பதை நான் நன்றாக உணர்ந்து இருக்கிறேன்.

இருப்பினும் இளம் வீரர்கள் அணியின் கப்டன் பொறுப்பிற்கு வர வேண்டும். ருவென்ரி-20 போட்டியில் வீரர்களைச் சிறப்பாக வழிநடத்திச் செல்ல, யாரோ ஒருவர் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இருப்பினும் அவுஸ்ரேலியாவுடன் நடைபெறவுள்ள ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளுக்கான கப்டன் பதவியில் தொடர்ந்து நீடிப்பேன்.

முதல் 10 ஓவர்கள் சிறப்பாக பந்து வீசினோம். ஆனால் சில மோசமான களத்தடுப்பும், 4 மோசமான ஓவர்களும் ஆட்டத்தை எங்களிடம் இருந்து பறித்துச் சென்று விட்டது. மேற்கிந்தியத்தீவு அணி சிறப்பாக விளையாடியது. தோல்வி அடைந்ததால் எமது ரசிகர்களிடம் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

## வாய்ப்பு மறுப்பு; ஹபீஸே பொறுப்பு



(லாகூர்)


இலங்கைக்கு எதிரான முக்கியமான அரையிறுதியில் கப்டன் முகமது ஹபீஸ் தான் என்னை நீக்கினார். இதற்கு அணி நிர்வாகம் காரணம் அல்ல என அப்துல் ரசாக் பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளார்.

நான்காவது ருவென்ரி-20 உலக கோப்பை அரையிறுதியில் பாகிஸ்தான் அணி இலங்கையிடம் தோல்வி அடைந்து, பைனல் வாய்ப்பை பறிகொடுத்தது. இப்போட்டியில் அனுபவ வீரர் அப்துல் ரசாக்கை சேர்க்காதது குறித்து கடும் விமர்சனம் எழுந்தது.

இது குறித்து பாகிஸ்தான் கப்டன் முகமது ஹபீஸ் கூறுகையில், கூடுதலாக ஒரு பந்து வீச்சாளரைச் சேர்க்க அணி நிர்வாகம் முடிவு செய்ததால் தான் அப்துல் ரசாக்கை நீக்கினோம் என்றார்.

இதனை ரசாக் மறுத்துள்ளார். இது குறித்து அவர் தெரிவிக்கையில், இலங்கைக்கு எதிரான அரையிறுதியில் பங்கேற்க மனதளவில் தயாராக இருந்தேன். ஆனால், வாய்ப்பு மறுக்கப்பட மிகுந்த ஏமாற்றம் அடைந்தேன். இதற்கு அணி நிர்வாகம் காரணம் அல்ல. கப்டன் முகமது ஹபீசின் தன்னிச்சையான முடிவால் தான் நீக்கப்பட்டேன். இதனை அவர் ஒத்துக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் மீது பழி சுமத்தக் கூடாது.

அரையிறுதி போட்டியை வெளியே இருந்து கவனித்தேன். ஒருவேளை அதில் விளையாடியிருந்தால், எனது சிறப்பான பங்களிப்பைக் கொடுத்திருப்பேன். இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி கூட, நான் இடம்பெற்றிருந்தால் கடைசிக் கட்டத்தில் பாகிஸ்தானுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்கும் எனக் கருத்துத் தெரிவித்தார்.




கிராண்ட் பிரிக்ஸ் பார்முலா-1 கார் பந்தயத்தில் முதலிடம் பெற்று கிண்ணத்தை வென்ற ஜேர்மனியின் செபாஸ்டியன் வெட்டல். இப்போட்டியில் முன்னணி வீரர்கள் பலர் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ருவென்ரி-20 உலகக் கிண்ணம்
### உழைப்பிற்குக் கிடைத்த ஊதியம்



(கொழும்பு)

மிகவும் கடினமான கால கட்டத்தில் கிண்ணத்தைக் கைப்பற்றியிருக்கின்றோம். இந்த வெற்றியை வார்த்தைகளால் சொல்ல முடியாது. ருவென்ரி -20 உலகக் கிண்ணத்தை நாம் வென்றது எங்கள் கடின உழைப்பிற்கு கிடைத்த சிறந்த ஊதியம் என உலகக் கிண்ண ருவென்ரி -20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகன் விருது வென்ற மேற்கிந்தியதீவின் அதிரடி வீரர் சாமுவேல்ஸ் தெரி வித்தார். மிகவும் கடினமான காலக் கட்டத்தில் உலக கிண்ணத்தை வென்று இருக்கிறோம். இந்த கிண்ணத்தை வெல்ல நாங்கள் மிகவும் கடினமாக உழைத்தோம். இந்த வெற்றியை வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை. நாங்கள் ஏற்கனவே இலங்கையிடம் 2 முறை தோற்று இருந்தோம். 3ஆவது முறையாக தோற்கக்கூடாது என்று நான் கெய்லிடம் கூறினேன். இந்த ஆடுகளத்தில் துடுப்பாட்டம் செய்வது என்பது சவாலாக இருந்தது. இதனால் பந்தை நன்றாகவே கணித்த பிறகே அடித்து ஆடுவது என்று முடிவு செய்தேன். அதற்கு ஏற்றவாறு ஆடினேன். ஐ.பி.எல். போட்டியில் சிறந்த பந்து வீச்சாளரான மலிங்கா பந்தில் ஆட்டம் இழந்தேன். ஆனால் தற்போது அவர் பந்தை அதிரடியாக விளாசி ஓட்டங்கள் குவித்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பெண்கள் ருவென்ரி -20 கிரிக்கெட் கிண்ணம் வென்றது அவுஸ்ரேலியா

(கொழும்பு)

மகளிர் உலக கிண்ண ருவென்ரி 20 இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணியை 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய அவுஸ்ரேலிய அணி சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டது. கொழும்பு, பிரேமதாசா மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய அவுஸ்ரேலியா 20 ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட் டங் களைப் பெற்றது. இதில் ஜெஸ் கேமரான் 45, லேன்னிங் 25, ஹீலி 26, பிளாக்வெல் 13 ஓட்டங்களைப் பெற்றனர்.

143 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலை யில் கள்மிறங்கிய இங்கிலாந்து 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று 4 ஓட்டங்களால் வெற்றி வாய்ப்பைக் கோட்டைவிட்டது. இதில் கப்டன் சார்லோட்டி எட்வர்ட்ஸ் அதிகபட்சமாக 28 ஓட்டங்களைப் பெற்றார். ஆஸி. வீராங்கனை ஜெஸ் கேமரான் ஆட்ட நாயகி விருது பெற்றார். தொடரின் சிறந்த வீராங்கனையாக இங்கிலாந்து கப்டன் சார்லோட்டி தேர்வு செய்யப்பட்டார்.




## மஹேல கப்டன்

(கொழும்பு)


சர்வதேச கிரிக்கெட் சபையால் தெரிவு செய்யப்பட்ட ருவென்ரி -20 கிரிக்கெட் கனவு அணியின் கப்டனாக மஹேல ஜெயவர்த்தன இடம் பிடித்துள்ளார்.

நடந்து முடிந்த உலகக் கிண்ண ருவென்ரி -20 கிரிக்கெட் தொடரை அடுத்து கனவு அணி ஒன்றை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இலங்கை அணியிலிருந்துமாத்திரமே 3 வீரர்கள் இவ்வணிக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதோடு, மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளிலிருந்து தலா 2 வீரர்களும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் தொடரின் அணி:

கிறிஸ் கெயில், ஷேன் வடசன், விராட் ஹோலி, மஹேல ஜெயவர்தன, லூக் ரைட், பிரென்டன் மக்கலம், மார்லன் சாமுவேல்ஸ், லசித் மலிங்க, மிற்சல் ஸ்ரார்க், சயீட் அஜ்மல், அஜந்த மெண்டிஸ். 12வது வீரர்: சுரேஷ் ரெய்னா



## ஜோகோவிச், அசரன்கா சம்பியன்

(பீஜிங்)

சீன ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சேர்பியாவின் ஜோகோவிச் மற்றும் அசரன்கா ஆகியோர் கிண்ணம் வென்றனர். சீன தலைநகர் பீஜிங்கில் நடந்த இத்தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் இரண்டாம் நிலை வீரர் சேர்பியாவின் ஜோகோவிச், ஏழாம் நிலை வீரர் பிரான்சின் சோங்காவை எதிர்கொண்டார். இதன் முதல் செட்டை ஜோகோவிச் அதிரடியாக 7--6 என வென்றார். இரண்டாம் செட்டிலும் தனது ஆதிக்கத்தை தொடர்ந்த ஜோகோவிச் 6-2 என எளிதில் கைப்பற்றினார். முடிவில் ஜோகோவிச் 7-6, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். இத்தொடரில் சம்பியன் பட்டத்தை ஜோகோவிச் மூன்றாவது முறையாக கைப்பற்றுகிறார், இதற்கு முன் 2009, 2010இல் பட்டம் வென்றார். இதேவேளை, பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் பெலாரசின் விக்டோரியா அசரன்கா, ரஷ்யாவின் மரியா ஷரபோவா மோதினர். இதில் அபாரமாக ஆடிய அசரன்கா 6-3, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை வென்றார்.



# கிண்ணம் வென்றன கணேசன், நவஜீவன்






(புத்தூர்)

குணரட்ணம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை பன்னாலை கணேசன் மற்றும் உடுப்பிட்டி நவஜீவன் அணிகள் கைப்பற்றிக்கொண்டன. குணரட்ணம் ஞாபகார்த்தமாக புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் ஸ்ரீகௌதமன் கட்டடப் பொருள் வாணிப அனுசரணையுடன் நடாத்திய மாவட்ட மட்டத்திலான கரப்பந் தாட்டப்போட்டி மின்னொளியில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

அணிகள் 'ஏ', 'பி' என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இப்போட்டித் தொடர் நடத்தப்பட்டது. 'பி' பிரிவிற்கான இறுதிப்போட்டியில் பன்னாலை கணேசன் அணியும் புத்தூர் வளர்மதி அணியும் மோதின. முதலாவது சுற்றில் 25 - 20, இரண்டாவது சுற்று 18 - 25, மூன்றாவது சுற்று 28 - 26, நான்காம் சுற்று 25- 22 என்ற கணக்கில் வெற்றிபெற்று 'பி' பிரிவில் சம்பியனானது பன்னாலை கணேசன் அணி.

'ஏ' பிரிவிற்கான போட்டியில் அச்சுவேலி விக்கினேஸ்வரா அணியும் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் மோதின முதலாவது சுற்றில் 17 - 25, இரண்டாவது சுற்று 26 - 28, மூன்றாவது சுற்று 22-25 என்ற கணக்கில் வெற்றிபெற்று 'ஏ' பிரிவில் சம்பியனானது உடுப்பிட்டி நவஜீவன் அணி. 'பி' பிரிவின் சிறந்த விளையாட்டு வீரனாக பன்னாலை கணேசன் அணியின் பிறெக்ஸனும் 'ஏ' பிரிவில் சிறந்த விளையாட்டு வீரனாக உடுப்பிட்டி நவஜீவன் அணியின் நிருசாந்தும் தெரிவானார்கள்.

கழகத்தலைவர் தலைமையில் நடைபெற்ற இவ்விறுதிப் போட்டிக்கு பிரதமவிருந்தினராக கோப்பாய் பிரதேசசெயலர் பிரதீபன், சிறப்புவிருந்தினராக இலங்கை வங்கி அச்சுவேலி கிளை முகாமையாளர் புவனேந்திரன் கௌரவவிருந்தினராக யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்ட சம்மேளனத்தலைவர் மனோகரனும் கலந்து சிறப்பித்தனர். (93,02)



டொனால்ட் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் இரண்டாமிடத்தை யாழ். சென்றலைட்ஸ் அணி பிடித்துக்கொண்டது. இரண்டாமிடத்திற்கான கிண்ணத்தை விருந்தினர்களிடமிருந்து சென்றலைட்ஸ் அணித் தலைவர் பெற்றுக் கொள்கின்றார். இப்போட்டித் தொடரில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# மாதகல் சென். ஜோசப் முதலிடம்



(சுன்னாகம்)

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன்விழா கால்பந்து வெற்றிக் கிண்ணத்தை மாதகல் சென். ஜோசப் வித்தியாலயம் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன் விழா நிகழ்வுகளையொட்டி நடைபெற்று வரும் பெருவிளையாட்டுப் போட்டிகளிலொன்றாக பெண்கள் கால்பந்தாட்டப் போட்டி யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்றது.

இச்சுற்றுப்போட்டியில் முதலாம் இடத்தினை யாழ்.மாதகல் சென்ஜோசப் வித்தியாலயம் முதலிடத்தையும், யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தினையும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

இச்சுற்றுப்போட்டியில் அதிக கோல்களை (06) அடித்த செல்வி.அனட் (மாதகல் சென்ஜோசப்வித்தியாலயம்)சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டி நிகழ்வில் போட்டிக்கு அனுசரணை வழங்கிய எட்வின் குணரட்ணம் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. மற்றும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஈஸ்வரதாசன், கல்விச் சமூகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (12)

# அகிபன் சிறப்புப் பந்து வீச்சு; சுருண்டது மட்டு. மெதடிஸ்


அகிபனின் சிறப்பான பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரி அணிய்ய சென். பற்றிக்ஸ்கல்லூரி அணி சுருட்டியது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிச் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த வெள்ளிக்கிழமை கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற ஒரு நாள் போட்டி ஒன்றில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அணி அகிபனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இதில் எந்தவொரு துடுப்பாட்ட வீரராலும் நிலைத்து நின்று ஆடமுடியாதவாறு சென். பற்றிக்ஸ் வீரர்களின் பந்து வீச்சு அமைந்திருந்தது. இறுதியில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அணி 22 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஜித்குமார் ஐந்து, சாத்விகன் நான்கு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அகிபன் 8 ஓவர்கள் பந்து வீசி ஐந்து ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக எட்டு ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைக் கொய்தார். மற்றும் கொலின்ஸ் எட்டு ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், கிருசாந்தன் ஐந்து ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 37 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 5.2 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கொலின்ஸ் ஆட்டமிழக்காது எட்டு ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் நிலக்ஷன் எட்டு, டானியல் ஐந்து ஓட்டங்களைப் பெற்றனர்.



பந்து வீச்சில் நிவேதன் 13 ஓட்டங்களைக் கொடுத்து இரு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (எஸ்.பி.)

# கிளிநொச்சி மாவட்ட மட்டப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய கால்பந்தாட்ட அணிக்கான வீரர்களை தெரிவு செய்வதற்கான பிரதேச மட்டப் போட்டிகள் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட மட்ட போட்டிகள் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் கரைச்சி, பூநகரி, பச்சிளைப்பள்ளி, கண்டாவளை பிரதேச அணிகள் மோதவுள்ளன. (93)



மட்டுவில் சோமாஸ்கந்தா மழலைகள் பூங்காவின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை சிறப்புற நடைபெற்றது. நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏராளமான சிறார்கள் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தினர். உடற்பயிற்சி நிகழ்வில் சிறார் ஒருவர் ஈடுபடுவதையும் பூங்கா ஆசிரியருடன் சிறார்கள் நிற்பதையும் காணலாம். (இ)


# பிறிமியர் லீக் கால்பந்து வென்ற அணிகள்

இங்கிலாந்து பிறிமியர் லீக் தொடரில் மன்செஸ்டர் சிட்டி, செல்ஷி, வெஸ்ட் ப்ரோம்விச், ஆர்சனல் அணிகள் வெற்றிபெற்றன.

மன்செஸ்டர் சிட்டி கழகத்திற்கும் சன்டர்லான்ட் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் மன்செஸ்டர் சிட்டி கழகம் 3 - 0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. அக்கழகம் சார்பாக 5ஆவது, 60ஆவது, 89ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டன. செல்ஷி கழகத்திற்கும் நோர்விச் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் செல்ஷி கழகம் 4 - 1 என்ற கணக்கில் இலகுவாக வெற்றிபெற்றது. நோர்விச் கழகம் சார்பாக போட்டியின் 11ஆவது நிமிடத்தில் கோலொன்று பெறப்பட்டபோதிலும், செல்ஷி சார்பாக 14ஆவது, 22ஆவது, 31ஆவது, 76ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டிருந்தன.

ஸ்வன்சீ கழகத்திற்கும், றெடிங் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. றெடிங் கழகம் சார்பாக 31ஆவது, 44ஆவது கோல்கள் பெறப்பட, ஸ்வன்சீ கழகம் சார்பாக 71ஆவது, 78ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டிருந்தன. வெஸ்ட் ப்ரோம்விச் கழகத்திற்கும், குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் கழகத்திற்குமிடையிலான போட்டியில் வெஸ்ட்ப்ரோம்விச் கழகம் 3 - 2 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

வெஸ்ட் ப்ரோம்விச் கழகம் சார்பாக 5ஆவது, 22ஆவது, 85ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டதோடு, குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் கழகம் சார்பாக 35ஆவது, 90ஆவது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டன.





# 572 தீவுகள் 4 இலட்சம் மக்கள்!

இந்தியாவின் ஒரு மாநிலமாக, கொஞ்சம் தொலைவில் குட்டி குட்டித் தீவுகளாக உலக வரைபடத்தில் சிறுசிறு எறும்புக் கூட்டங்களைப் போல் காட்சி தரும் அந்தமான் - நிகோபார் தீவுகள் அழகானவை.

சொர்க்க பூமியெனும் இத்தீவுகள் வங்கக் கடலில், சென்னையிலிருந்து நேர் கிழக்காக 1190 கி.மீ. தொலைவில் உள்ளன. பழங்குடியினர் இன்றைக்கும் வாழும் பூமி. 1050இல் இரண்டாம் ராஜேந்திரன் கடாரத்தின் மீது படையெடுத்த போது நிகோபார் தீவுகளைக் கைப்பற்றினான் என்று வரலாறு தெரிவிக்கிறது. அதில் நிக்கோபார், "நக்கவரம்" எனக் குறிக்கப்பட்டுள்ளது.

92 வீதமும் இயற்கை எழில் கொஞ்சும் பசுமைக்காடுகள்தான்.

அந்தமானில் மொத்தம் 572 தீவுகள் உள்ளன. என்றாலும் 38 தீவுகளில்தான் மக்கள் வாழ்கின்றனர். தற்போது மக்கள் தொகை ஏறக்குறைய நான்கு இலட்சம். இதில் தமிழர்கள் ஒரு இலட்சம். வங்காளிகள் இரண்டு இலட்சம். வடமாநிலத்தவரும் பிறரும் சேர்ந்து ஒரு இலட்சம் பேர் வாழ்கின்றனர். மொத்தப் பரப்பு 8250 சதுர கிலோ மீற்றர்தான்.


இங்கு இந்திய அரசாங்கமே மக்களை அழைத்துக் குடியேற்றியுள்ளது. குடும்பத்திற்கு 5 ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளனர். குன்றுகளில் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக வாழ்கின்றனர்.

தலைநகர் போர்ட் பிளேர் ஒன்றுதான் நகரம். நகரத்தின் கடைவீதிகளில் தவிர பிற இடங்களில் கூட்டமே இல்லை. காணும் இடமெங்கும் தூய்மை, பசுமை.

போர்ட் பிளேரிலிருந்து தெற்கே 7 கி.மீ. தொலைவிலுள்ளது கார்பின் கடற்கரை. குதிரை லாடம்போல் அமைந்த சிறிய பகுதிதான். ஆரவாரம் இல்லாத கடலலைகளில் இளைஞர்கள் விசைப் படகுகள் மூலம் தண்ணீர் விளையாட்டில் பறக்கின்றனர். குளித்து மகிழ, சாய்வு இருக்கைகளில் படுத்து ஓய்வெடுக்க உணவருந்த வசதிகள் உள்ளன.

போர்ட் பிளேரின் ஒரு பகுதியில் தில்தமன் ஏரி அமைந்துள்ளது. ஏரியைச் சூழ்ந்துள்ள குன்றில் சிறுவர்களுக்கான பூங்கா அமைந்துள்ளது. பூங்காவின் மையத்தில் பெரிய காந்தியடிகளின் சிலை அமைந்துள்ளது. ஜப்பானியர் இங்கு இருந்ததன் அடையாளமாக அவர்களது கோவில் ஒன்றை மாதிரியாகப் பூங்காவில் அமைத்துள்ளனர்.

ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துத் தீவிரமாகப் போரிட்டவர்களைக் கொண்டுவந்து அடைத்த கூண்டுச் சிறைதான் செல்லுலார் சிறை. 693 தனித்தனி அறைகள், 7 கட்டடங்களில் வரிசையாக



அமைத்து, ஏழும் மையக் கோபுரத்தைச் சந்திக்கும்படி அமைத்துள்ளனர். மையக் கோபுரத்திலிருந்து பார்த்தால், சிறைக் கூடங்கள் தெளிவாகத் தெரியும். மூன்று கோடி செங்கற்களை அறுத்து, அத்தனை பெரிய கட்டடங்களையும் கட்ட, கைத்தோல் உரிய உழைத்தவர்கள் கைதிகள்தான். 1890இல் தங்களுக்குத் தாங்களே கட்டி முடித்த சிறையில் பட்ட கொடுமைகள் எழுத்தில் அடங்காது. டேவிட் பர்ரி என்ற சிறை அதிகாரி செய்த கொடுமைகளை காணொளி வாயிலாக இப்போதும் அங்கே காட்டுகிறார்கள். சிறையில் தற்போது கைதிகள் இல்லை. தேசியச் சின்னமாக உள்ளது.

**சாத்தம் தீவு:** ஆர்க்கிபோல்ட் பிளேர் என்ற நிலவியல் ஆய்வாளர் 1789இல் முதன் முதலில் 200 பேருடன் குடியேற்றத்திற்காகக் கால் வைத்த மிகச் சிறிய தீவுதான் சாத்தம் தீவு. ஒன்றரை கி.மீ. சுற்றளவுள்ள இத்தீவும் ஒரு துறைமுகம்தான். போர்ட் பிளேருடன் ஒரு பாலம் இத்தீவை இணைக்கிறது. ஆசியாவிலேயே மிகப்பெரிய மர ஆலை இங்குள்ளது. கப்பல் மூலம் மரங்கள் வந்து இறங்குகின்றன. பெரிய மரங்கள் சில வினாடிகளில் அறுத்துத் தள்ளப்படுகின்றன.

**ரோஸ் தீவு:** உலக நாடுகள் பலவற்றை வென்ற ஆங்கிலேயருக்கு லண்டன் தலைமையாக இருந்தது போல் அந்தமான் தீவுகளை நிர்வகிக்கச் சிறிய ரோஸ் தீவு அமைந்தது. அரச மாளிகை, மருத்துவமனை, தேவாலயம், அச்சுக்கூடம், நீச்சல் குளம் போன்ற அனைத்து வசதிகளும் அங்கே இருந்தன. 2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலையில் அனைத்தும் இடிந்து பாழடைந்துள்ளன. புள்ளிமான்கள் மட்டுமே சுற்றித் திரிகின்றன.

**பாராடங் தீவு:** வடக்கு அந்தமானில் உள்ளது. இத்தீவின் சில குன்றுகளும், இருபுறமும் மாங்குரோஸ் மரங்களின் அழகும் கண்களைக் கவர்வன. இங்குள்ள இருள் சூழ்ந்த குகைக்குள் விளக்கு வெளிச்சத்தில் அற்புதக் கலைச் சிற்பங்களைப் பார்க்க முடியும். சிற்பிகள் செதுக்கியவையல்ல, இயற்கை வடித்தவை. குன்று முழுவதும் சுண்ணாம்புப் பாறை. மேலே சிறுசிறு துவாரங்கள் உள்ளன. அதன் வழியே தண்ணீர் கசிந்து சொட்டுச் சொட்டாக விழுகிறது. அது தரையில் விழாமல் வடிந்து பல்வேறு வடிவங்களாகத் திரண்டு நிற்கின்றன.

பாராடங் தீவில் எரிமலைக் குழம்பு கக்கிக் கொண்டிருக்கும் குன்றும் உள்ளது. சிமெண்ட் பால் போல் குழம்பு ஆங்காங்கே கசிந்து கொண்டே இருக்கிறது. ஒரு கி.மீ. சுற்றளவில் கற்கள் தான். தூரத்தில் கருகிக் காணப்படும் தென்னை மரங்கள்.


இத்தீவில் இன்னமும் ஜார்வா பழங்குடியினர் கூட்டமாக வசிக்கின்றனர். கையில் வேல், அம்பு ஆயுதங்களுடன் மரவுரி தரித்துக் காணப்படுவர்.

**கேவ்லாக் தீவு:** அந்தமானில் உள்ள பல தீவுகள், கடற்கரைகள், தெருக்களின் பெயர்கள் ஆங்கில அதிகாரிகளின் பெயர்கள்தான். போர்ட் பிளேரிலிருந்து 50 கி.மீ. தொலைவிலுள்ள கேவ்லாக் தீவிலுள்ள ராதா நகர் கடற்கரையும், விஜயநகர் கடற்கரையும். உலகின் அழகான கடற்கரையில் இவை முதன்மை பெறுகின்றன. கடல் நீர் மூன்று வண்ணங் களில் ஜாலம் காட்டுகிறது. கரையைத் தொடும் அலைகள் வெண்மையாகவும் அடுத்து கொஞ்ச தூரம் பச்சை நிறமாகவும், அதன்பின் நடுக்கடல் கருமையாகவும் தோன்றும். குழந்தைகள் முதல் முதியவர் வரை உள்ளே சென்று அச்சமின்றிக் குளிக்கலாம்.

அந்தமானுக்கு எவரும் புதிதாகக் குடியேற இயலாது. எனவே மக்கள் தொகை குறைவு. ஆறுமாதங்கள் மழை பொழியும். தெருக்களில் புழுதியைக் காணமுடியாது. ஒழுங்கான தார்ச்சாலையில் விதிகளைக் கடைப்பிடிக்கிறார்கள். பிளாஸ்டிக் பைகள் தடைசெய்யப் பட்டுள்ளன. காகிதப்பை களையே பயன்படுத்து கின்றனர். பிச்சைக் காரர்களை காண முடியாது. ஆங்கிலமும் இந்தியும் பயிற்று மொழிகள், தமிழ்ப் பாடசாலைகளும் உண்டு.

அந்தமானுக்கு உணவுப் பொருள்கள் முதல் மக்களுக்குத் தேவையான அனைத்தும் சென்னையிலிருந்தும் கொல்கத்தாவிலிருந்தும் வருகின்றன. தீவுகளில் கொஞ்சம் நெல்லும் காய்கறிகளும் விளைகின்றன. தரமான உணவுகள் கிடைக்கின்றன. அதிகாலை 5 மணிக்கே விடிந்து, மாலையில் விரைவில் பொழுது சாய்ந்துவிடுகிறது.

# 100 மில்லியன் வருடத் தகவல் சேமிப்பு





தகவல் சேமிப்பு என்பது எல்லாச் சமூகத்திற்கும் உள்ள பிரச்சினை. இடம் போதாமையோடு, தகவலைச் சேமிக்கும் ஊடகங்கள் காலாவதி ஆவதும் ஒரு பிரச்சினை. பதனிட்ட தோலில் சேமித்தவை அழியும். கல்வெட்டு கூடத் தேயும். காகிதமோ ஈரமும், வெப்பமும் செய்யும் சேதத்திலிருந்து தப்பித்தாலும், பூச்சிகளின் தாக்குதலுக்கு எளிதில் சிக்கிவிடுகிறது. சமீபத்திய மின்காந்த சேமிப்பு முறைகளிலோ பிரச்சினை அவற்றை மீளெடுப்பதற்கு அந்தந்தக் கருவிகள், பதிப்பு முறைகள் அழிவது என்பது ஒரு பிரச்சினை. LP records, Cine-film, Tape decks, Cassettes, CDs, DVDs போன்றன எல்லாமே தகவலை மீட்கத் தக்க கருவிகள் இல்லையெனில் பயனற்றவையாகின்றன. சிறு சேதம் ஏற்பட்டால் கூட இவை முழுதும் பயனற்றவையாகின்றன என்பது இன்னொரு பிரச்சினை. ஜப்பானிய நிறுவனம் ஒன்று, இந்தப் பிரச்சினைகளில் பலவற்றை ஒரே நேரத்தில் தீர்த்து விட்டதாகத் தெரிகிறது. ஒரு சிறு கண்ணாடித் துண்டில் 100 மில்லியன் வருடங்களுக்குத் தகவலைச் சேமிக்க முடியுமாம். வெப்பம், இரசாயனப் பொருட்கள் போன்றவை எவையும் இந்தக் க்வார்ட்ஸ் கண்ணாடியை ஏதும் செய்யாதாம். உடைப்பதும் எளிதல்லவாம். ஆனால்... விலை? அதுதான் பிரச்சினையாக இருக்கலாம். இன்னொன்று இந்தத் தகவலை மீட்கத் தேவையான மைக்ரோஸ்கோப் (ஒப்டிகல்) பத்தாயிரம் வருடங்களுக்குப் பிறகு கிடைக்குமா என்பது கேள்விக்குரியதே என்கிறது இந்தச் செய்தி அறிக்கை.

# இளவயதில் மூக்குக்கண்ணாடி ஏன்?



இன்றைக்கு சிறுவர்கள் பலர் தங்கள் இத்தனை இளம் வயதிலேயே கண்ணாடி போட்டுக் கொண்டு திரிவதைப் பார்க்க முடிகிறதல்லவா! சற்றே பின்னோக்கித் திரும்பிப் பாருங்கள். இருபது வருடங்களுக்கு முன்னர் கண்ணாடி போட்ட மனிதர்களைச் சந்திப்பதே அபூர்வம். இன்றைக்கு மட்டும் மிக இளம் வயதிலேயே கண்ணாடி ஏன் தேவைப்படுகிறது? இப்படி ஒரு சிந்தனையின் விளைவாக நிகழ்ந்தேறியது அவுஸ்ரேலியாவில் ஒரு ஆராய்ச்சி. 4000 பேரை உள்ளடக்கி, அவர்களுடைய பார்வைக் குறைபாட்டுக்கான காரணங்களை மீக விரிவாக ஆராய்ந்ததில் கிடைத்த பதில் வியப்பூட்டுகிறது.

அதாவது, குழந்தைகள் வீட்டுக்கு வெளியே போதுமான நேரத்தைச் செலவிடாததே இந்த பார்வைக் குறைபாடின் காரணம் என்கிறது இந்த ஆராய்ச்சி முடிவு. மருத்துவ மொழியில் சொல்லவேண்டுமெனில், எட்டு வயதிற்கும் பன்னிரண்டு வயதுக்கும் இடைப்பட்ட பருவத்தில் வளர்ச்சியடையும் மயோபியா சரியான அளவில் இல்லாததே இந்த குறைபாட்டுக்குக் காரணம். குழந்தைகள் சிறுவயதில் வெளியே ஓடி விளையாடுவதன் அவசியத்தை இந்த ஆராய்ச்சி அதிர்ச்சியுடன் அறிவிக்கிறது. கண்ணின் கருவிழி சரியான அளவில் இருப்பதற்கும், ஒழுங்கான வடிவில் இருப்பதற்கும் இயற்கை வெளிச்சம் மிக மிக அதிகம் என்பது அந்த ஆராய்ச்சி அடித்துச் சொல்லும் செய்தியாகும்.




# 31 அங்குல புஜம்!

கடுமையான உடற்பயிற்சிகளைச் செய்து, உடம்பை இரும்பு போல் உறுதியாக வைத்திருக்கும் பலரை பார்த்திருப்போம். ஆனால், எகிப்து நாட்டைச் சேர்ந்த, 24 வயதான, முஸ்தபா இஸ்மாயில், உடல் கட்டை பேணுவதில், வித்தியாசமாக எதையாவது செய்து பார்க்க விரும்பினார். கைகளில் உள்ள புஜங்களை பெரியதாக்கி, சாதனை படைக்க வேண்டும் என்பதற்காக, பிரத்யேகமான உடற்பயிற்சிகளை செய்தார். தொடக்கத்தில், சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், ஆண்டுகள் உருண்டோடியதும், அவரது கனவு, சாத்தியமானது.

பத்தாண்டுகள் கடும் முயற்சிக்குப் பின், முஸ்தபாவின் புஜங்கள், கர்லா கட்டையை விட, பெரியதாகி விட்டன. தற்போது, அவரது புஜங்களின் சுற்றளவு என்ன தெரியுமா?

31 அங்குலம். கிட்டத்தட்ட, அவரது இடுப்பு அளவும், புஜங்களின் அளவும் ஒன்றாக உள்ளன. கதாயுதம் போன்ற, அவரது புஜங்களை பார்ப்போர், ஒரு நொடி ஸ்தம்பித்து விடுகின்றனர். "இது எப்படி சாத்தியமானது. இதற்காக, மருந்துகள் ஏதாவது சாப்பிட்டீர்களா?' என, அவரிடம் கேட்டால், "அதெல்லாம் ஒன்றும் இல்லை. கடுமையான உடற்பயிற்சியும், உணவு முறையாலும் தான், என் கனவு நிறைவேறியது. தினமும், ஒன்றரை கிலோ சிக்கன், அரை கிலோ மீன், ஏழு லீற்றர் தண்ணீர், இதுதவிர, வழக்கமான உணவுகள் என, சாப்பிட்டுக் கொண்டே இருந்தேன்...' என்றார். தற்போது, உலகிலேயே, மிகப் பெரிய புஜங்களை உடையவர் என்ற, சாதனைக்காக கின்னஸ் புத்தகத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.



# எது முதல் தீர்வு?

ஒரு மன்னரின் அரசவையில் நான்கு அமைச்சர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவரை முதன்மை அமைச்சராக்க அரசர் விரும்பினார்.

நான்கு அமைச்சர்களும் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கினர். அவர்களில் யாரை முதன்மை அமைச்சராக்குவது என்று யோசித்தார்.

அவர்களுக்கு ஒரு தேர்வு வைத்து அதில் வெல்பவரை முதன்மை அமைச்சராக்கி விடுவது என முடிவு செய்தார்.

மன்னர் நான்கு அமைச்சர்களையும் அழைத்து, "நான் உங்களுக்கு ஒரு போட்டி வைக்கப் போகிறேன். இந்தப் போட்டியில் வெல்பவருக்கு இந்த அவையில் முதன்மை அமைச்சர் பதவி அளிக்கப்படும்" என்றார்.

அவர்கள் போட்டி என்னவாக இருக்கும்? என்று யோசித்துக் கொண்டிருந்தனர்.

மன்னர் அவர்களிடம், "என்னிடம் கணித முறைப்படி தயாரிக்கப்பட்ட பூட்டு ஒன்று இருக்கிறது. நாளைக் காலை அரசவைக்குக் கொண்டு வரப்படும் அந்தப் பூட்டை விரைவாக யார் திறக்கிறார்களோ அவருக்கு முதன்மை அமைச்சர் பதவி அளிக்கப்படும்" என்றார்.

நான்கு அமைச்சர்களும் அங்கிருந்து சென்று விட்டனர்.

மூன்று அமைச்சர்கள் பகல் பொழுது முடிந்து இரவு முழுக்க பூட்டை எப்படி விரைவாகத் திறக்கலாம் என்று பல்வேறு கணித நூல்களையும் படித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் ஒரு அமைச்சர் மட்டும், சிறிது நேரம் புத்தகத்தைப் பார்த்து விட்டு இரவானதும் தூங்கச் சென்று விட்டார்.

மறு நாள் காலை அரசவைக்கு பெரிய அளவிலான அந்தப் பூட்டு கொண்டு வரப்பட்டது.

அந்தப் பூட்டைப் பார்த்தவர்கள் அனைவரும் அசந்து போனார்கள். அவ்வளவு பெரிய பூட்டை அன்றுதான் அனைவரும் பார்க்கின்றனர்.

இரவு முழுக்க விழித்திருந்து பல புத்தகங்களைப் படித்த அமைச்சர்கள் ஒவ்வொருவராக அந்தப் பூட்டைத் திறந்து பார்க்க முயன்றனர். அவர்களால் அது முடியவில்லை என்று பின்வாங்கினர்.

கடைசியாக, இரவு தூங்கச் சென்ற அமைச்சர் பூட்டை வந்து பார்த்தார். அந்தப் பூட்டு பூட்டப்படவே இல்லை. திறந்தே இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டார். அவர் எளிதாகப் பூட்டைத் திறந்து காண்பித்தார்.

அவரே முதன்மை அமைச்சரானார்.

எந்த ஒரு பிரச்சினைக்கும் அதைப் புரிந்து கொள்வதுதான் முதல் தீர்வு.

# முத்தமிட்டால் கள் வெறி




"கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம்தான் கள்வெறி கொள்ளுதடி" என்ற பாரதி வார்த்தைகளை சினிமா பாட்டின் மெட்டுக்கேற்ப

கன்னத்தில் முத்தமிட்டால் டால் டால் டால்
கள்வெறி கொள்ளுதடி ஹேய்!

என்று கிரியேட்டிவாக மாற்றித் தந்தேன். இயக்குநருக்குப் புல்லரித்துவிட்டது. "கல் வெறி கொல்லுதடி" என்று மாற்றினால் கூடுதல் "எமோசனல்" கிடைக்கும் என்று யோசனை சொன்னேன். "நாம மாத்தி டயத்த வேஸ்ட் பண்ண வேணாம். அவங்களே அழுத்தான் பாடுவாங்க" என்றார் இயக்குநர்.

**- பேயோன் பக்கம், ஆனந்த விகடன்.**

# என்ன செய்ய? - விமலாதித்த மாமல்லன் -



விஜய் டிவியில் சூப்பர் சிங்கர் நிகழ்ச்சி போய்க்கொண்டிருந்தது.

அவளைப் பாத்தா "அச்சி"யாட்டம் இல்லை?

அச்சி?! ஓ லஷ்மியா. அட ஆமா.

அடச்சே அது முகுந்தனும் லஷ்மியுமேதான். இவங்க எங்க இங்க வந்தாங்க.

முகுந்தனை போனில் பிடித்து, "முகுந்தன், உங்களுக்கு பிரகதி எப்பிடி...?"

"என் கசின் குருவோட பொண்ணு மாமல்லன்."

"குரு...?"

"நாங்கள் 133இல இருந்தப்போ என்கூட இருந்தானே... குருப்ரசாத்..."

"ஆமா உங்ககூட ஒரு பையன் தங்கியிருந்தது இப்ப ஞாபகம் வருது... பேர் கூட... குருன்னு நீங்க சொன்னதுகூட ஞாபகம் வருது பட். முகம் நினைவில்லே."

"பச்சைக் கலர் சேத்தக் வெச்சிருந்தான். உங்களுக்கு நல்லா தெரியும் மாமல்லன். அப்ப உங்களை மாதிரியே அவனும் ஒல்லியா இருப்பான்" ஐடில இருந்தான். யூஎஸ் போயிட்டான். அவன் பொண்ணுதான் பிரகதி...

பழகிய பலரின் முகங்கள் மறந்துவிடுகின்றன. நினைவுபடுத்திக்கொள்ள நிறைய முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டி இருக்கிறது, என்பது தெரிய நேர்ந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எவ்வளவு கஷ்டமாய் இருக்கும்?

எட்டுமாதக் குட்டியாய் 1990இல் அறிமுகமாகி "மாமைய்யன் மாமா" என்று எனக்கு இன்னொரு பெயர் சூட்டிய "அப்பு" என்கிற அபிநவ் முகுந்தை, பல வருட இடைவெளிக்குப் பிறகு, அவன் பிளஸ் 2 படிக்கையில் பார்க்க நேர்ந்தது.

தெரியலையா! "மாமைய்யன் மாமாடா" எனச்சொல்லி நகைத்த படி பெற்றோர்கள் நினைவுபடுத்தினர். அவன் மையமாக சிரித்து வைத்தான். அவனுடைய இரண்டரை வயதில் டி.டி.கே ரோட் வீட்டு போர்டிகோவில் நான்கூட அவனுக்கு பந்து போட்டிருக்கிறேன்.

வெளி கேட்டுக்கு வலதுபுற மதிற்சுவர் மறைவில் சற்று ஒதுங்கிநின்று தம்மடித்துக் கொண்டிருக்கையில், கேட்டைப் பிடித்தபடி தலை நீட்டி எட்டிப்பார்த்து "இன்னுமா முடிக்கலை" என்று அப்பு சலித்துக்கொண்டது, என் நினைவில் உளி ஒப்பமாக தங்கியிருக்கிறது.

"ஹலோ அங்கிள் எப்படி இருக்கீங்க" என்று சிறிய புன்னகை பூத்து "பெரிய மனுஷி"யாய் நகர்ந்து செல்லும் டாக்டருக்குப் படிக்கும் ஜனனி, ஐந்தோ ஆறோ படிக்கையில் சிலவருட இடைவெளியில் சந்திக்க நேர்ந்த போது, அவள் தனது இரண்டரை வயதில் எங்களுக்கு வழங்கிய அளவற்ற மகிழ்ச்சிகள் எவையுமே அவளுக்கு நினைவில் இல்லை. வெட்டி ஆபீசர் வீரபத்திர வாகனத்தில் அண்ணா நகர் குடியிருப்பில் இருந்து வேலைக்குக் கிளம்புகையில் படிக்கட்டில் உட்கார்ந்துகொண்டு, ஒருநாளும் இளம் மனைவியை கையசைக்க விட்டதில்லை. அது ஜனனியின் தனியுரிமை.

மனிதர்கள் குழந்தைகளாய் இருக்கையில், இயல்பாய் மகிழ்ச்சியை வழங்குகிறார்கள். அவற்றை நினைவுப்பேரேட்டில்கூட குறித்துவைத்துக்கொள்வது இல்லை.

இப்படித்தான் சூதுவாதின்றி எந்த கணக்குவழக்கும் பார்க்காமல் நாம்கூட ஒருகாலத்தில் இருந்திருக்கிறோம் என்பதை எப்போதேனும் சில பெரியவர்கள் நமக்கும் நினைவூட்டுகிறார்கள். அந்தத் தருணங்களில் நாமும் இந்தக் குழந்தைகள் போலவே நினைவுகூர முடியாது தர்மசங்கடத்தில் அசட்டுச் சிரிப்புடன் தத்தளிக்கவேண்டி இருக்கிறது. இதைப் புரிந்துகொண்டு "எனக்குக் கிடைத்த மகிழ்ச்சிதான் முக்கியம் நீ நினைவுகூர்கிறாயா இல்லையா என்பதல்ல" என்கிற குழந்தைப் புன்னகையுடன் கடந்துசெல்லும் அந்த முதியவர்களின் முதிர்ச்சி வாய்க்கப்பெற்றால் அது வரம்.

"அப்பு"வுக்கு சொந்தக்காரி, இணையான திறமைசாலி என்றாலும் பிரகதி குருப்ரசாதைக் காட்டிலும் முன்பின் அறியாத சுகன்யா தன் வசீகரக் குரலால் சுண்டி இழுக்கிறாளே என்ன செய்ய?

# P.S.ஞானம்


**- R.P. ராஜநாயஹம் -**

எம்.ஆர்.ராதா 1954இல் "ரத்தக் கண்ணீர்" படத்தின் மூலம் மறுபடியும் தமிழ் திரையுலகிற்குள் நுழைந்து செகண்ட் இன்னிங்சில் பட்டையை கிளப்பினார்.

முதல் இன்னிங்சில் பரிதாபமாக சினிமாவில் தோற்றவர். அவருடைய ஆரம்ப திரை அனுபவங்கள் மிகவும் மோசமாயிருந்தது.

1937இல் "ராஜசேகரன்" என்ற படத்தில் கதாநாயகன் ஈ.ஆர்.சகாதேவனுக்கு (திருவிளையாடலில் பாண்டிய மன்னனாக நடித்தவர். இசை அறிஞர் ஹேமநாத பாகவதராக வரும் பாலையாவை அரண்மனைக்கு அழைத்து பாடவைத்து கௌரவிக்கும் வரகுண பாண்டியன். தில்லானா மோகனாம்பாளில் மனோரமாவின் மைனர் கணவர்.) வில்லனாக இவர் நடிக்கும்போது இயக்குநர் சதி செய்து இவர் காலை உடைத்து விட்டார். பல மாதங்கள் படுக்க வேண்டிய நிலையாகி விட்டது.

ஒரு வழியாய் எழுந்து "பம்பாய் மெயில்" என்ற படம் டி.எஸ். பாலையாவும், ராதாவும் பார்ட்னராகி சொந்தமாக எடுத்தார்கள். படம் எடுத்து முடிந்த போது இருவருக்கும் "போதும், போதும்... போதுமப்பா..." என்று சொறிந்து விட்டு எழும்படியாக



ஆகிவிட்டது. ஏண்டா படம் எடுத்தோம் என்ற ஞானம் வந்து விட்டது.

மாடர்ன் தியேட்டரில் ரொம்ப அசதியாக எம்.ஆர். ராதா அப்போது கம்பெனி நடிகராக சேர்ந்தார். திண்ணையில் உட்கார்ந்த நிலை தான்.

அங்கே தான் பொள்ளாச்சி எஸ்.ஞானம் என்ற (அந்தக் கால தமன்னா!) நடிகை பந்தாவாக மகாராணி போல இருந்திருக்கிறார்.

"சந்தனத்தேவன் - படம் எடுக்கப்பட்டுக் கொண்டிருந்த காலம் அது. "ஞானத்தோடு யாரும் பேசக்கூடாது, சிரிக்ககூடாது" என்று மாடர்ன் தியேட்டர்சில் ஏகப்பட்ட கெடுபிடி.

ராதாவுக்கு எப்போதும் "மீறல்"தான் வாழ்க்கை. கண்ணாலே சைட் அடித்து பி.எஸ். ஞானத்தை அந்த கட்டுப்பாடு நிறைந்த நிறுவனத்திலிருந்து சிறையெடுத்து கடத்தி பொள்ளாச்சி கொண்டு போய்... அப்புறம் என்ன...

"திண்ணையில் இருந்த மனிதருக்கு திடீர்னு சாந்தி முகூர்த்தம்!".. ராதா "நெம்புகோலின் தத்துவத்தை" அழகாக ஞானத்திற்கு விளக்கிக் காட்டிவிட்டார்!!

இந்த பி.எஸ்.ஞானம் தமிழ் சினிமா ரசிகர்களுக்கு நன்கு தெரிந்தவர் தான்.

"பாசமலர்" படத்தில் வில்லி. கதாநாயகி சாவித்திரியை ரொம்ப கொடுமைப் படுத்துவாரே. அவர் தான் பி.எஸ்.ஞானம்.

பாசமலர் படம் பார்க்கும் பெண்கள் இவருக்கு விடும் சாபங்கள் சொல்லி முடியாது. வில்லி என்றால் அப்படி ஒரு வில்லி!

"நாசமா போயிருவ"
"தேவிடியா"
"ராட்சசி"
"உன் மூஞ்சியில முள் கட்டி அடிக்கணும்டி"
"என் கையிலே மட்டும் இவ கிடைச்சான்னா இவ மூஞ்சை அப்படியே கல்லுலே மீனை உரசிர மாதிரி உரசிப்பிடுவேன்"
"பேதியிலே போக... கழிச்சல்ல போக"

இவ்வளவு சாபங்கள்.

"பாசமலர்" படம் பார்க்கும் பெண்கள் இடைவேளைக்குப் பின் அழுதுகொண்டே பி.எஸ். ஞானத்தை திட்டி இவ்வளவு சாபம் இடுவார்கள்.




பாசமலர் பழைய படமாகி ஒவ்வொரு ஐந்து வருடமும் பார்க்கக் கிடைக்கும்போதும் பி.எஸ். ஞானம் இவ்வளவு சாபம் வாங்குகின்ற நிலை தான்.

கடைசியில் பி.எஸ். ஞானம் காரில் போகும்போது திருத்தங்கல் அருகில் விபத்துக்குள்ளாகி கழுத்து துண்டாகி துடி துடித்து இறந்து போனார்.

அபத்தம் என்னவென்றால் பி.எஸ்.ஞானம் கொடூர விபத்தில் இறந்த பிறகு பல வருடங்கள் கழித்து சென்னையில் "கிருஷ்ணவேணி" தியேட்டரிலும், "ராம்" தியேட்டரிலும் இந்தப் படம் காண்பிக்கப்பட்டது. அப்போது சாவித்திரி "கோமா"வில் படுத்து விட்டார். அப்போது படம் பார்த்த பெண்கள் கூட அழுதுகொண்டே பி.எஸ். ஞானத்தை திட்டி சாபமிட்டு "நீ விளங்கவே மாட்டேடி" என்று சாபமிட்டுக்கொண்டு தான் படம் பார்த்தார்கள்.

# நற்பிரஜைகளை உருவாக்குவது ஆசிரியர்களின் தலையாய கடமை



(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் சிறந்த எதிர்காலத்துக்காக தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றும் ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்பட வேண்டியவர்களென ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.சென்பெனடிக்ற் றோ.க.த வித்தியாலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வு வித்தியாலய அதிபர் அருட்சகோதரி ஞானதர்சினி தலைமையிலும், யாழ்.ஸ்தான சி.சி.த.கலவன் பாடசாலையின் ஆசிரியர் தின நிகழ்வு, அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மாணவர்களுக்கான கல்வியறிவைப் போதிப்பது மட்டுமல்லாமல் சமூகத்தில் நற்பிரஜைகளை உருவாக்குவது ஆசிரியர்களின் தலையாய கடமையாகும். கல்வியறிவு நற்பண்புகள் கொண்ட சமூக உருவாக்கத்தில் முன்னின்று உழைக்கும் ஆசிரியர்களைக் கௌரவப்படுத்தும் நாள் இன்றாகும் இந்நாளில் ஆசிரியர்களைக் கௌரவப்படுத்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஆற்றலும் ஆளுமைமிக்க நற்சமூகத்தை உருவாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு ஆசிரியர்களுக்கே உரித்தானது. இச்சமூகப் பொறுப்பை நன்குணர்ந்து செயலாற்றுவதன் மூலமே நற்பண்புகளைக் கொண்ட சமூகமாக எமது சமுதாயத்தை மாற்றிய அமைக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன், ஆசிரியர்ளை கௌரவிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் பரிசில்களை வழங்கி வைத்தார்.

# வடமாகாண பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலை சட்ட மூலம்

பாடசாலை சிற்றுண்டி சாலைகள் தொடர்பான சட்ட மூலத்தை சரியான முறையில் அமுலாக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி முதலில் வடமாகாணத்தின் பாடசாலைகளில் இந்தத் திட்டம் அமுலாக்கப்படவுள்ளது.

பாடசாலைகளில் காணப்படுகின்ற சிற்றுண்டி சாலைகளில் விற்பனை செய்யப்படும் சிற்றுண்டிகள் மற்றும் இனிப்பு வகைகளினால் பல்வேறு தொற்று நோய்கள் ஏற்படுகின்றன.

இதனைத் தடுக்கும் நோக்கில் இந்தச் சட்ட மூலத்தை தீவிரப்படுத்த முயற்சிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைதீவு மாவட்டங்களின் பாடசாலைகளில் இந்த சட்ட மூலம் அமுலாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுகாதார பரிசோதகர்களுக்கு தீர்வின்றேல் போராட்டம்

தமது கோரிக்கைகளுக்கு எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் தீர்வு வழங்கப்படாத பட்சத்தில், முன்னறிவிப்பு இன்றி போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

அனைத்து இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் உபுல் குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார். வேதனம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும் அதற்கான தீர்வுகள் எவையும் இதுவரையில் முன்வைக்கப்படவில்லை. இந்த நிலையில் அடுத்த வரவு செலவுத் திட்டத்திலாவது இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு பல்கலைக்கழக தமிழ் சங்க போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி.....)

கொழும்பு பல்கலைக் கழகத்தின் தமிழ்ச் சங்கத்தினால் நடத்தப்பட்ட அகில இலங்கை தமிழ்த்திறன் காண் போட்டிப்பரீட்சைகளின் அகில இலங்கை ரீதியான போட்டி முடிவுகள். முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு,

**கவிதைப் போட்டி**

மத்திய பிரிவு

சற்குணலிங்கம் டிலக்சன் (வவு/வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்), அருள்நேசன் எழிலினி (திரு/மெதடிஸ் மகளிர் கல்லூரி), வித்யசாகரி ஜெகன் மோகன் (திரு/சண்முகா மகளிர் கல்லூரி)

மேற்பிரிவு

எஸ்.கபில்தேவ் (மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி) விஸ்ணுஜா செல்வகுமார் (கொ/சைவ மங்கையர் வித்தியாலயம்), ந.நவசாந்தி (புனித அன்னம்மாள் வித்தியாலயம்)

இவ்வாறு அகில இலங்கை ரீதியில் நாடகம் மற்றும் விவாதப் போட்டிகள் திறந்த போட்டிகளாக எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளவத்தை, கொழும்பு தமிழ் சங்க மண்டபத்தில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு அகில இலங்கை ரீதியில் வெற்றியாளர்களுக்கு 14 ஆம் திகதி முத்தமிழ் விழா அன்று பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(42)

# போலி நாணயத்தாள்களை கண்டு பிடிக்கும் வழிமுறைகள்

(கொழும்பு)

போலி நாணயத்தாள்களைக் கண்டுபிடிப்பது தொடர்பில் பொலிஸ் தலைமையகம் சில அறிவுரைகளை மக்களுக்கு வழங்கியுள்ளது. இதற்கான பிரதான எட்டு விடயங்கள தொடர்பில் கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன கூறுகையில்,

நாணயத்தாளிலுள்ள நீரடையாளத்தை (வோட்டர் மார்க்) பரிசோதித்தல். வெளிச்சத்தில் பிடிக்கும் போது அதன் பெறுமதி செங்குத்தாக தெரிதல். நாணயத்தாளின் இரு கரைகளிலும் உள்ள சிறு சிறு கோடுகள் உணரப்படுதல்.

கறுப்புநிற கோடொன்று செங்குத்தாகச் செல்லும். போலி நாணயத்தாள் உண்மை நாணயத்தாளை விட பாரம் குறைவாக இருத்தல். இரு தாள்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டப்பட்டிருக்கலாம். ஒரு கட்டு நாணயத்தாளுடன் போலி நாணயத்தாளும் உள்ளடக்கப்பட்டிருக்கலாம்.

அவசரமாகப் பணமாற்றம் செய்ய வருபவர்கள் தொடர்பில் அவதானமாக இருத்தல். போன்ற விடங்கள் தொடர்பில் அவதானமாக இருக்கும் பட்சத்தில் போலி நாயணத்தாள்களை அடையாளம் காணமுடியும். அவ்வாறு போலி நாணயத்தாள்கள் இனங்காணப்படுமாயின். உடனடியாக அவற்றைப் பொலிஸ நிலையத்தில் ஒப்படைக்குமாறு பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

# விமான எதிர்ப்பு ஆயுதங்கள் முள்ளிவாய்க்காலில் மீட்பு

முல்லைத்தீவு வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியிலிருந்து பொலிஸ் அதிரடிப் படையினர் ஒரு தொகுதி ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர். பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற அதிரடிப் படையினர் குறித்த ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

விமானத்தைத் தாக்கும் ஆயுதம் ஒன்றும் மற்றும் ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் 1563, விமான எதிர்ப்புக் குண்டுகள் 160 மற்றும் பல்வேறு துப்பாக்கிகளுக்கும் பயன்படுத்தப்படும் குண்டுகள் 1300 என்பன மீட்க்கப்பட்டுள்ளன. இவ்வாயுதங்கள் நிலத்தின் கீழ் புதைக்கப்பட்ட நிலையிலிருந்து மீட்டுள்ள போதிலும் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

# சிறுவர் நன்னடைத்தைப் பிரிவின் மன்னார் அதிகாரி இடமாற்றம்

மன்னார் மாவட்ட சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரியாகக் கடமையாற்றிவந்த மைக்கல் கொலின் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடமாற்றம் தொடர்பில் மன்னார் மாவட்ட சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரி மைக்கல் கொலின் தெரிவிக்கையில் இடமாற்றம் உண்மையானது. இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து இவ்விடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான கடிதம் கடந்த வெள்ளிக்கிழமை தனக்கு கிடைத்ததாகவும் கூறினார்.


மன்னார் வைத்தியசாலையில் நீண்டகாலமாக இயங்காதுள்ள மன்னார் பொதுவைத்தியசாலையின் சிறுவர் நன்னடத்தைப் பிரிவில் தன்னை தற்போது நியமித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொருத்தமற்ற காரணத்தைக் கூறி தனக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்திற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் கூறினார்.




சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உரையாற்றுவதையும், மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளையும், கலந்து கொண்ட மாணவர்களையும் காணலாம். (படம்: ஆர்.ராஜகுமார்)

# பிரதேச செயலகங்கள் தோறும் கலாசார மண்டபங்கள் அமைக்கப்படும்



கிளிநொச்சியிலுள்ள நான்கு பிரதேச செயலக பிரிவுகளுக்கும் தனித்தனியான கலாசார மண்டபங்கள் அமைக்க அடுத்த வருடம் நடவடிக்கை எடுக்கப்படும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த 4ஆம் திகதி கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவின் கலாசார நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில். மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்கான கலாசார மண்டபம் அமைப்பதற்கான நிதி ஓதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுவிட்டது மாவட்ட கலாசார மண்டபம் அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது அதே போன்று பூநகரி கரைச்சி கண்டாவளை பிரதேச செயலகங்களுக்கான தனியான கலாசார மண்டபங்கள் அமைப்பதற்கு அடுத்த வருடம் நிச்சயம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதன் மூலம் தற்போது நாம் ஒரு நிகழ்வினை நடாத்துவதற்காக எதிர் நோக்கி வருகின்ற எல்லாப் பிரச்சினைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அத்தோடு பூநகரி என்பது ஒரு பழம்பெரும் பிரதேசம் இந்த பிரதேசத்திற்கென்றே தனியான பல சிறப்பம்சங்கள் உண்டு பழைய வரலாற்றோடு பின்னி பிணைந்த மண் இந்த பிரதேசத்தின் அடையாளங்கள் மக்களின் வாழ்வியல் முறைகள் பூநகரியின் பாரம்பரிய கலைகலாசாரங்களை இன்றும் பறைசாற்றுகின்றது பூநகரி மொட்டைக்கறுப்பன் அரிசிக்கு இன்றும் உள்ளூரில் மட்டுமன்றி புலம்பெயர் நாடுகளிலுள்ள எம்மக்களிடம் அதிகம் கேள்வி இருக்கிறது.

பூநகரிப்பிரதேசத்தின் கலைஞர்களான பொன்தில்லைநாதன் (இலக்கியம் நாடகம்) த. ஜெகநாதன் (பல்துறை) ந.சுப்பிரமணியம் (சாத்துப்படி) ஆகியோர் "கலைநகரி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பூநகரி பிரதேச செயலர் வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற கலாசார நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மேலதிக அரச அதிபர் சீரணிவாசன் பூநகரி பிரதேச சபை தலைவர் ஸ்ரீஸ்கந்தராசா யாழ்.பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீகனேசன் தலைமை உதவி அரச அதிபர் திருமதி ஜெயராணி பிரதேச செயலர்கள் கலாசார உத்தியோகத்தர்கள் பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் செல்வம் இராணுவ அதிகாரிகள் கலைஞர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## கட்டடப்பணிகள் துரித கதியில்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் பொலிஸ் நிலையம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு வரும் நிலையில் இதன் கட்டடப்பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இக்கட்டடம் ஒரு கோடி 90 இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (109)

## வெட்ட இருந்த நிலையில் முதிர்ச்சியடையாத மாடுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொல்களத்திலிருந்து நேற்று முன்தினம் வயது குறைந்த மாடுகள் பொலிஸாரினால்கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளன.

நேற்று யாழ். பொலிஸ் குற் றத்தடுப்பு பிரிவினர் திடீர் பரி சோதனை மேற்கொண்ட போது மேற்படி 20 மாடுகள் கொல்களத்தில் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டன. இம்மாடுகள் இறைச்சிக்காக கொல்லப்படுவதற்கான வயதெல்லையை அடையாததன் காரணமாகப் பொலிஸார் இம்மாடுகளை மீட்டு நீதிமன்றில் ஒப்படைத்துள்ளனர்.

கிளிநொச்சிப்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட இம்மாடுகள் 6 வருடம், 4 வருடம், 8 வருடம் என வயதை கொண்டிருந்தமையால் இம்மாடுகளைத் தாம் கைப்பற்றியதாக யாழ். பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்பு பொலிஸ் அதிகாரி தென்னக்கோன் தெரிவித்தார். இதுவரை இவ்வாறு நூற்றுக்கும் மேற்பட்ட மாடுகளைத் தாம் மீட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## விவேகானந்தரின் ஜனனதினம்; விழாக்குழு தெரிவு

'பசித்திரு' விழித்திரு' தனித்திரு' என்று உலகமக்களை விழித்தெழச் செய்த இந்துமகா ஞானி சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜனன தினவிழாவைக் கொண்டாடுவதற்காக உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இந்து சமய சேவாசங்கத்தின் இப்பிரதேச இணைப்பாளர் என்.பி. ஸ்ரீந்திரன் அறிவித்துள்ளார்.

தலைவர் சி.ஜெயக்குமார், உபதலைவர் செல்வி க.சிவயோகராணி, செயலாளர் திருமதி சிவசக்தி சோமநாதன் உப செயலாளர் செல்வி சு.கலைவாணி, பொருளாளர் எஸ். உதயசீலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த விழாக்குழுத் தெரிவுக் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை 10மணிக்கு ஸ்ரீஆஞ்சநேயர் ஆலய அன்னதான மண்டபத்தில் இணைப்பாளர் தலைமையில் நடை பெற்றது. (06)



மக்கள் வங்கியின் வவுனியா கிளையானது புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள சிறுவர் கணக்குகளுக்கான பரிசுத்திட்டத்தினை அறிமுகம் செய்யும் நிகழ்வு வவுனியா வைரவபுளியங்குளம் இளவேனில் பாலர் பாடசாலையில் இடம்பெற்றது. மக்கள் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் உரையாற்றுவதையும் உண்டியலில் சேர்க்கப்பட்ட நிதியினை சிறுவர்கள் முகாமையாளரிடம் கையளிப்பதையும் காணலாம். படங்கள்: வவுனியா நிருபர் 160

## பதிவிருக்கப் பெட்டகம்

நவீனத்துவம் என்ற பெயரில் நாங்கள் எதையெல்லாமோ செய்து கொண்டிருந்தோம். எந்தப் பகட்டும் ஆர்ப்பாட்டமுமில்லாமல் இந்த நாவல் வாழ்க்கையை ஒரு புதிய கோணத்தில் முன் வைத்திருக்கிறது. ஒரு முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நாவலைப் படிக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டிருந்தால் என்னுடைய இலக்கியப் பார்வையும் வாழ்க்கைப் பார்வையுமே மாறியிருக்கும்.

**– மலையாள எழுத்தாளர் சக்கரியா அசோகமித்திரனின் 'தண்ணீர்' நாவலுக்கு எழுதிய முன்னுரையில்**

நாவல் என்பது ஆசிரியனின் ஒப்புதல் வாக்குமூலம் அல்ல. மாறாக நம்மைச் சிக்கவைக்கும் ஒரு பொறியாகிவிட்டது உலகு, அதில் மனித வாழ்வின் சாத்தியப்பாடுகள் இனி யாவை என்ற ஆராய்ச்சிதான் நாவல். "உலகம்" என்ற இந்த அடைமொழி சுட்டுவது ஒரு பயங்கரத்தை. அதாவது, நமது பூமிக்கிரகத்தில் இனி நிகழ இருப்பவை அப்படி அவை நிகழும் இடங்களுடன் மாத்திரம் நினறுவிடப் போவதில்லை, பேரழிவுகள் நடந்தால் அவை முழுஉலகுக்கும் பொதுவானவை என்பதைச் சுட்டுவது இந்த அடைமொழி. இதன் விளைவாக நம்மைத் தீர்மானிக்கிற சக்தி, மேன்மேலும் புறக்காரணிகளிடமே சென்றது. இவற்றிலிருந்து தப்பிக்க முடியாதவர்களாகிறோம் நாம். நமது நிலையில் நாம் ஒருவரையொருவர் ஒத்திருப்பதும் மேன்மேலும் அதிகமாகிறது.

**– மிலன் குந்தெரா**

ரிச்சர்ட் மேலப் (Richard Malouf) எனும் அவுஸ்ரேலிய நாவலாசிரியர் "ஒரு எழுத்தாளன் பேச நேர்கையில்" (When a Writer Speaks) எனும் ஒரு சுவாரஸ்யமான கட்டுரையில், சமகால எழுத்தாளன் – தொலைக்காட்சி உறவைப் பற்றி பேசுகிறார்.

எவ்வாறு நாவல் வடிவத்தின் வருகைக்குப் பின் எழுத்தாளன் சமூக அரசியல் விவகாரங்கள் குறித்தும் விரிவாக ஒரு கற்பனைப்படைப்பில் பேச சாத்தியம் உருவாகிறது என்று கூறுகிறார். அதுவரை தன்னை அரசியல் கடந்தவனாக எழுத்தாளன் கருதி வந்திருக்கலாம். ஆனால் நாவலின் காலகட்டம் இந்த நிலைப்பாட்டை மாற்றுகிறது. இனி அவன் பலதரப்பட்ட சித்தாந்தங்கள், நிலைப்பாடுகள், கருத்துநிலைகளுக்கு தன் எழுத்துவெளியில் இடமளிக்க வேண்டிய தேவை உருவாகிறது. ஆரம்பத்தில் அரசியலற்றவராக தன்னை காட்டிக் காண்ட தோமஸ் மன் எவ்வாறு ஜெர்மனிய யூத எதிர்ப்பு அரசியலுக்கு எதிரானவராக தன்னை முன்னிறுத்தினார், அவர் குடியாட்சியை எதிர்ப்பவராக ஆரம்பத்தில் இருந்து பின்னர் அதை ஆதரிப்பவராக எப்படி மாறினார் என்பதை மேலப் விவரிக்கிறார். தோமஸ் மன் தன் நாவல் எழுதும் அனுபவம் வழியாகவே தன் அரசியல் பார்வையிலும் மாற்றம் பெற்றார் என்று கூறுகிறார். இலக்கியத்தில் அரசியல் வேண்டுமா வேண்டாமா என்கிற விவாதம் இன்னும் தமிழில் நிறைவு கொள்ளாமலே இருக்கிறது. மேலப்பின் இக்கட்டுரை அவ்விதத்தில் இங்கு முக்கியமானது.

இதே கோணத்தில் யோசித்தால் எழுத்தாளன் காலத்தின் பிரதிநிதி, சமூகத்தின் குரல், நீதிக்காக போராடுபவன் என்று சொல்லத் தோன்றும். அவன் வெறுமனே கதை எழுதுபவனாகவோ, தன் தபால் பெட்டியில் இறகை விட்டுப் போன குருவியைப் பற்றி மனம் உருகுபவனாகவோ மட்டும் இருக்கத் தேவையில்லை. அவன் விலைவாசி உயர்வு பற்றியும் அணு உலை ஆபத்து பற்றியும் டி.வியில் உரத்து பேசலாம் தானே? **– அபிலாஷ் சந்திரன்**

நாவலில் கதை முக்கியமில்லை. பாத்திரம் முக்கியமில்லை. சமூக சித்திரம் முக்கியமில்லை. பின் என்னதான் முக்கியம்? ஒருவேளை வார்த்தைகள்? ஒருவேளை மனதில் அழியாமல் நிற்கும், அணுக அணுக அகன்று செல்லும் அனுபவத்தின் அதீத இயல்புகள்?...

எனக்குக் கற்பனையில் நம்பிக்கையில்லை. அனுபவத்தை எழுத்தில் வடிக்கையில் வரும் விளைவுதான் கற்பனை என்று தோன்றுகிறது. இந்த வாழ்க்கை, இந்த அனுபவங்கள் கதையை விடச் சுவையாக இருக்கக் கூடுமென்று நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?... ஆனால், என்றுதான் என்னால் உங்களைத் திருப்திப்படுத்த முடிந்திருக்கிறது? ஏன், இன்றுவரையில் எனக்கே நான் எழுதிய ஒன்றும் அப்படித் திருப்திகரமாகப் படவில்லை. பின் ஏன் எழுத வேண்டும்? நியாயமான கேள்வி... எழுதாமல்?

**– நகுலன்**

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்

# G.C.E. (O/L) Examination model Paper

## English

ஆசிரியர் : A. கிரிதரன்

**Test 01**

**Complete the following sentences using the correct words given in brackets.**

A. I don't know what (1) ...................................... (happening, happened, is happen) (2) ................................ (in, at, of) the meeting.

B. The entire workforce has (3) ................................ (going, gone, went) on strike (4) ................................ (and, as, while) the are underpaid.

C. The school cannot (5) ........................................ (functioned, function, functioning) without suitable officials (6) ................................ (to, for, off) administraion.

D. We will (7) ........................................ (send, sent, sending) a reminder (8) ........................................ (to, for, with) the clients before a month.

E. When are you (9) ................................ (left, leaving, leave) the country (10) ................................................ (to, for, with) meet your boss?


**Test 02**

**Match (A) with (B). Write the correct letter in the box given.**

| A | | | B |
|---|---|---|---|
| 1. Keep out of reach of children | ☐ | (a) | At the zoo. |
| 2. Drive slow | ☐ | (b) | At a children's park |
| 3. For external use only | ☐ | (c) | Chemicals. |
| 4. Strictly for children below 14 years | ☐ | (d) | Ointments. |
| 5. Do not feed the animals | ☐ | (e) | At a road repair. |

**Test 03**

**Write (5) five sentences about the picture**



1) ..........................................................................................

2) ..........................................................................................

3) ..........................................................................................

4) ..........................................................................................

5) ..........................................................................................

**Test 04**

**Complete the following descrption using the words given in the box (Three extra words are given)**

Vineetha is only ten. She lives with her (1) ............................ in Badulla. Her hometown is (2) ........................................ She attends a (3) ........................................ school in Badulla. Vineetha (4) ........................ her parents at a road accident, three years (5) ................

**strong, village, lives, lost, later, ago, aunt, Ratnapura**

**Test 05**

**Complete the dialogue given below. Use the phrases given in the box.**

Maya- Hai Pushpa! We meet after a long time.

Pushpa - Hai Maya ! - (1) ........................................................................

Maya - Why not? How can I forget you? (2) ........................................................

Pushpa - Well, you are working at a bank, aren't you?

Maya - Of course yes. I was recently (3) ..........................................................

Pushpa - Wow ! (4) ..........................................................................!

Maya - Thanks my dear. But I think (5) ........................................ should go to you.

- all the credits
- promoted as the Bank Manager
- You still remember me !
- You made me continue my studies
- My heartiest congratulations

**Test 06**

**Write a paragraph on one of the following. use about 50 words.**

(a) Environmental Pollution (b) A Picnic to the beach

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

**Test 07**

**Read the Poem and answer the questions given below. ( A part of the poem is given)**

### Funeral Blues

Stop all the clocks, cut off the telephone,
Prevent the dog from barking with a juicy bone,
Silence tha pianos and with muffled drum,
Bring out the coffin, let the mourners come.

Let aeroplanes circle moaning overhead,
Scribbling on the sky the message He Is Dead.
Put crepe bows round the white necks of the public doves,
Let the traffic policeman wear black cotton gloves.

1) Select and write the line which says that the person is dead? ..............................

2) List down two phrasal verbs.

(a) ........................................ (b) ..............................

3) Write the words from the poem which rhyme with the following words.

(a) telephone - .............................. (b) drum - ..............................

4) Find the word from the poem which gives the following meaning.

a) a box in which a dead body is placed for burial : ..............................

b) a bird with a thick body and short legs : ..............................

5) Write the name of a musical instrument mentioned in the poem?

..........................................................................................

**Test 08**

**You are the secretary of the English Literary Association in your school. You have planned to hold an English Educational Camp for the students above grade 6. Write a letter to the principal to obtain permission to have the English Educational Camp in the school. Use about 50 words. Include the following.**

Dates, Time, Venue, Events

....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................

**Part II**

**Test 09**

**Complete the following sentences using the correct form of the words given in brackets.**

1) Aunt Isabella is ............................................. (interest) in politics.
2) The trip to the Adam's Peak is a ................................ (remark) journey.
3) Picasso showed his ..................... (except) talent from a very young age.
4) My grand father died of heart ...................................................... (fail).
5) Sarath's parents want him become a ........................... (tradition) painter.
6) Mary grew into a .......................................................... (beauty) girl.
7) My aunt had suffered from a ............. (nerve) break down before she died.
8) It is ........................ (interest) to know that there are seeds which can fly!
9) The great poet died ....................................... (peace) two decades ago.
10) The fountain at the top of the mountain is .................. (aweful) beautiful.

**Test 10**

**Find the word class of the word in bold in each sentence and write the word class in the space given. The first one is done for you.**

1) The truck crashed on to a **huge** rock. (adjective)
2) Mala went through the document **carefully.** ( )
3) The agenda was **prepared** by Bob. ( )
4) Computor is a wonderful piece of **invention.** ( )
5) The lecturer distributed the tutes **among** the students. ( )
6) Monkey is **an** intelligent animal. ( )

**Test 11**

**Murthi is suffering from flu. The following is a piece of advice given by the doctor. Fill in the blanks correctly using the words given in the box.**


1) .................................................... in doors.
2) Don't .........................................................
3) Stay .............................. from other people
4) Have plenty of ................................................
5) Don't drink ...................................................
6) Take two Paracetamol tablets every 6 .............
7) Rest in .........................................................
8) Go to bed ..................................................
9) Don't .................................. heavy meals
10) Consult the .......................... after a week

**doctor / alcohol / stay / bed/ away/**
**hours / early / take / smoke / water**


**Test 12**

**Read the following advertisements and match with the needs. Write the right letter in the box provided**


(a)





(b)




(c)




(d)




(e)




1) 
I want to contact my friends abroad.

2) 
I love making delicious dishes.

3) 
I need some curtain materials.

4) 
My sister loves puppies very much.

5) 
My dream is to be a famous cricketer.

**Test 13**

**Grade 11 students of Amunuthenne Vidyalaya are planning for a three day trip. The following is their plan. Read the plan and answer the questions given below.**

| | | |
|---|---|---|
| $14^{th}$ | (Morning) | - Nuwara Eliya. |
| $14^{th}$ | (Afternoon | - Haggala Park (Lunch) |
| $14^{th}$ | (Evening) | - Carnival at Nuwara Eliya City |
| $15^{th}$ | (Morning) | - Ambewala |
| $15^{th}$ | (Afernoon) | - Lunch at Ambewala Rest |
| $15^{th}$ | (Evening) | - Ráwana Ella |
| $16^{th}$ | | - Bandarawela |

1) When will they reach Nuwara Eliya? ..................................................
2) Where will they have their lunch on the 2nd day? ..................................
3) When will they go to the Carnival? ..........................................................
4) Where will they ve on $15^{th}$ (evening)? ................................................
5) What is their plan for the $3^{rd}$ day? .......................................................

**Test 14**

**Write a letter to a friend inviting him / her to join you in a family tour to Kataragama. Include the following:**

no. of days, arrangements to spend the nights, places to visit, mode of transport. (Use about 150 words)

**OR**

**As the Secretary of the English Literary Association of your school, write a letter to the Director of Education of your area inviting him / her to be the Chief Guest at the Annual Awards Day Ceremony.**

**Include the following :**

Date, time, venue, special events, make a humble request to accept your invitation. (Use not more than 150 words)

....................................................................................................
....................................................................................................
....................................................................................................

## Test 15

**Read the following text and answer the questions that follow.**

Just after Christmas, two years ago, Jack and Liza decided to go away for New Year. They didn't want to stay in a hotel with crowds of people and they were delighted when they saw an advertisement in the Sunday Times for a holiday flat in a village near Oxford.

It was no ordinary flat. It was on the top floor of an old Tudor Mansion. They booked it and on New Year's Eve, they set off in the car. It was raining and freezing cold. They were happy and excited.

They had been driving for three hours when they saw the house in the distance. It looked magnificent with tall chimneys and a long, wide drive. They drove up to the huge front door, went up the steps, and knocked. Nothing happened. They knocked again. The door opened and a small, wild - looking, old lady stood there. She was wearing a worn - out gown. Without a word, she lead them into a dark room upstairs. When jack and Liza entered the room they couldn't believe their eyes. There were mice and cats and wild dogs chasing one after another.

With a sharp scream, Liza ran out. The old lady was staring at jack, stroking the black cat on her shoulders. The dogs started barking more loudly. Jack and Liza hurried down the stairs and quickly got outside. By then, the rain had turned to snow. Jack jumped into the car with Liza and drove to the next village and as midnight was striking, they found a hotel with a room for the night.

Underline the correct word / phrase that suit the blanks.

1) Jack and Liza didn't want to stay in a ..............................................

a) flat. b) hotel c) mansion

2) The flat was ..................................................

a) in a village b) in Oxford. c) in a Tudor mansion.

3) Write the sentence which says that the flat was different,

.................................................................................................

4) State whether the following statements are true of false:

a) It was sunny when they left the flat. ( .........)

b) Jack and Liza didn't want to stay among crowds. ( .........)

c) Jack and Liza couldn't find a hotel. ( .........)

5) What do the following highlighted words in the text refer to?

a) They - ....................... b) She - .......................

c) it - ....................... d) their - .......................

## Test 16

**Write essay on one of the following, Use about 200 words.**

1) Values of Senior Citizens.

Include :- Who Senior Citizens are, their contribution to the society, how to make them active members of the society.

2) Let's make a GREEN world.

Include :- Importance of plant, effect of globla warming, environmental pollution deforestation leading to threats in future.

3) Heritage Sites in Sri Lanka.

Include :- Types of heritage sites in Sri Lanka, values of heritage sites, how to protect the heritage sites.

.................................................................................................
.................................................................................................
.................................................................................................
.................................................................................................
.................................................................................................
.................................................................................................
.................................................................................................
.................................................................................................

# தரம் 5 மாணவர்களுக்கான பொது அறிவுத் துணுக்குகள்

## விளையாட்டுக்கள்

- எமக்கு உடல், உள ஆரோக்கியத்தை விளையாட்டுக்கள் தருகின்றன.
- நாம் கல்வி கற்கும் பாடசாலைகளிலும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவது வழக்கமானது.
- பிரதேச செயலக பிரிவுகளிலும், மாவட்ட மட்டங்களிலும் விளையாட்டுப் போட்டிகள் வருடந்தோறும் நடைபெறுவது வழக்கம்.
- அரசாங்கத்தினால் வருடந்தோறும் தேசிய விளையாட்டுப் போட்கள் நடாத்தப் படுகின்றன.
- விளையாட்டுக்கள் அவற்றின் உருவாக்கம், ஆடப்படும் முறை, தேவை ஆகியவற்றைப் பொறுத்து வேறுபடுகின்றன.

### கிராமிய விளையாட்டுக்கள்


தாயம் போடுதல்


போர்த்தேங்காய்



முட்டி உடைத்தல்


றபான் அடித்தல்


பல்லாங்குழி


கபடி


சடுகுடு


நுளம்புவலை


**கால்பந்தாட்டம் அல்லது உதைபந்தாட்டம்**

ஆங்கிலப் பெயர் : Foot ball

ஒரு பக்கத்தில் விளையாடும் வீரர்கள் எண்ணிக்கை 11



**கிரிக்கெட் - Cricket**



ஒரு பக்கத்தில் விளையாடும் வீரர்கள் எண்ணிக்கை 11

**கரப்பந்தாட்டம் - Volley ball**

வேறு பெயர் : - கைப்பந்து

இதுவே இலங்கையின் தேசிய விளையாட்டு ஆகும்.

ஒரு பக்கத்தில் விளையாடும் வீரர்கள் எண்ணிக்கை - 06



**வலைப்பந்தாட்டம் - Net ball**



ஒரு பக்கத்தில் விளையாடும் வீரர்கள் எண்ணிக்கை - 07

**ஹொக்கி - Hocky**

ஒரு பக்கத்தில் விளையாடும் வீரர்கள் எண்ணிக்கை -



**எல்லே**


எல்லே

இலங்கையரால் மட்டும் ஆடப்படும் விளையாட்டு இது.

ஒரு பக்கத்தில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை - 16

**கூடைப்பந்து Basket ball**

ஒரு பக்கத்தில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை - 05



**றக்பி - Ragby**

ஒரு பக்கத்தில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை - 16

# தி.மு.க வின் கறுப்பு சட்டைக்கு போட்டியாக அ.தி.மு.க.வினர் பச்சைச் சட்டை போராட்டம்



தமிழக அரசை கண்டித்து தி.மு.கவினர் கறுப்பு சட்டை அணிந்து துண்டு பிரசுரங்களை வழங்கும் போராட்டத்தை அனைத்து இடங்களிலும் நடத்தி வருகிறார்கள். புதுவையில் நேற்று தி.மு.க.வினர் மாநில அமைப்பாளர் ஜானகிராமன் தலைமையில் கறுப்பு சட்டை அணிந்து துண்டுப் பிரசுரங்களை வழங்கினார்கள். இது பற்றி அறிந்ததும் புதுவை அ.தி.மு.க.வினர் போட்டிப் போராட்டத்தில் குதித்தனர்.

நெல்லிதோப்பு தொகுதி அ.தி.மு.க எம்.எல்.ஏ ஓம்சக்தி சேகர் தலைமையில் அ.தி.மு.க.வினர் பச்சைச் சட்டை அணிந்து ஜெயலலிதா சாதனைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை வீடு வீடாகச் சென்று விநியோகித்தனர்.

துண்டுப்பிரசுரங்கள் அடிப்பதற்கு நேரம் இல்லாதாதால் அவசர, அவசரமாக கம்ப்யூட்டரில் துண்டுப்பிரசுரத்தை தயாரித்துக் கொடுத்தனர்.

தி.மு.க - அ.தி.மு.க.வினர் நடத்திய இந்த போட்டி போராட்டங்ளால் புதுவையில் பரபரப்பு எற்பட்ட நிலையில், இருதரப்பினர் போராட்டத்துக்கும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

இந்தியச் செய்திகள்


# கருணாநிதிக்கு "சனி" பார்வை



(சிவகங்கை)

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு "குரு" திசை முடிந்து, "சனி" பிடித்திருப்பதை போல், கருப்பு சட்டை அணிந்து கபட நாடகம் ஆடுகிறார் என சிவகங்கையில் தமிழ்நாட்டு அமைச்சர் கோகுல இந்திரா தெரிவித்துள்ளார். சிவகங்கையில் அரசின் சாதனை குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழகத்தின் உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் முதல்வர் ஜெயலலிதா புதிய யுக்தியைக் கடைபிடிக்கிறார். நாட்டிலேயே முதல் மாநிலமாக தமிழகத்தை மாற்ற முயற்சிக்கிறார். கடந்த தி.மு.க. ஆட்சியில் நடந்த நிலக்கரி ஊழல் மூலம், அரசுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டது. இதை மீட்டு, நிலக்கரி ஊழல்களை வெளியே கொண்டு வந்துள்ளார். கருணாநிதிக்கு குருதிசை முடிந்து "சனி" பிடித்திருப்பதை போல், கருப்பு சட்டை அணிந்து துண்டு பிரசுரம் வெளியிடுகிறார். நாட்டு மக்களுக்கு பாடுபடுவதுபோல், கருணாநிதி கபட நாடகம் ஆடுகிறார்.

நாட்டைப் பொருளாதார சீரழிவுக்கு கொண்டு சென்றவர் மத்திய நிதிஅமைச்சர் சிதம்பரம்தான். தி.மு.க. கூட்டணி வைத்துள்ள காங்கிரஸ் ஆட்சிபுரியும் மத்திய அரசுதான், மக்களை பாதிக்கின்ற வகையில் பெட்ரோல், டீசல், காஸ் சிலிண்டர் விலைகளை கடுமையாக உயர்த்தி வருகின்றது என்றார்.




# தனித் தெலுங்கானா மாநிலம் விரைவில் உதயமாகும்



(ஐதராபாத்)


தனி தெலுங்கானா மாநிலம் விரைவில் உதயமாகும் என்ற நம்பிக்கை உள்ளது என ராஷ்டிரிய லோக்தளம் கட்சித் தலைவர் அஜித் சிங் தெரிவித்துள்ளார். ஆந்திராவை இரண்டாகப் பிரித்து, தனி தெலுங்கானா மாநிலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. இதற்காக ஆந்திரா முழுவதும் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தெலுங்கானா மாநிலம் அமைவதற்கு, தன் ஆதரவைத் தெரிவிப்பதற்காக, ராஷ்டிரிய லோக்தளம் கட்சித் தலைவரும் மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சருமான அஜித் சிங், நேற்று முன்தினம் ஐதராபாத்துக்கு சென்றார்.

தெலுங்கானாவைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பி.க்களுடன் அவர் ஆலோசனை நடத்தினார். பின், செய்தியாளர்களிடம் அவர் தெரிவிக்கையில்; கடந்த மாத இறுதியில் தெலுங்கானாவை வலியுறுத்தி ஐதராபாத்தில் நடந்த முற்றுகைப் போராட்டம் முழு வெற்றி பெற்றது. இந்தப் போராட்டத்தை அடுத்து, டில்லி முழுவதும் தற்போது தெலுங்கானா விவகாரத்தைப் பற்றித் தான் பேசுகின்றனர்.

அடுத்த கட்டமாக என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து, தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த தலைவர்கள் ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டும். தனி தெலுங்கானா மாநிலம் விரைவில் உதயமாகும் இந்த நம்பிக்கை எனக்குள்ளது என்றார்.

# "பிரம்மோஸ்" சோதனை வெற்றி!



(பனாஜி)

கப்பல் படையின் பயன்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ள, "பிரம்மோஸ்" அதிநவீன ஏவுகணை நேற்று முன்தினம் வெற்றிகரமாக பரிசோதித்து பார்க்கப்பட்டது. இந்திய - ரஷ்ய கூட்டு தயாரிப்பில், அதிநவீன பிரம்மோஸ் ஏவுகணை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணைகள், 2005ஆம் ஆண்டு கடற்படையில் சேர்க்கப்பட்டன. பின், தரைப்படையிலும் சேர்க்கப்பட்டது. இந்நிலையில், கப்பல் படையின் பயன்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ள 290 கி.மீ. தூரம் சென்று தாக்கும் திறன் படைத்த பிரம்மோஸ் ஏவுகணை நேற்று முன்தினம் கோவா கடற்பகுதியில் சோதிக்கப்பட்டது.

கோவா கடற்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த, ஐ.என். எஸ். தீஜ் என்ற போர்க் கப்பலில் இருந்து செலுத்தப்பட்ட ஏவுகணை அரபிக் கடலில் நிறுத்தப்பட்டு இருந்த மற்றொரு இலக்கு கப்பலை தாக்கியது. உடனடியாக, அந்த கப்பல் தீப்பிடித்து நீண்ட நேரம் எரிந்தது. இந்தச் சோதனை வெற்றிகரமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டது. அடுத்த கட்ட சோதனையாக, கடற்படையின் நீர்மூழ்கி கப்பலில் இருந்தும் விண்ணில் இருந்தும் சோதித்து பார்க்க திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கனவே, தரைப் படையின் இரண்டு பிரிவுகளில், பிரம்மோஸ் ஏவுகணை சேர்க்கப்பட்டுள்ளது. விரைவில் இது விமானப் படையில் சேர்க்கப்பட உள்ளது.

# கூடங்குளம் முற்றுகை

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் கடல் வழியாக வந்த மீனவர்கள் நேற்று அங்கு முற்றுகையிட்டுள்ளனர் இதில் 48 கிராம மக்கள் பங்கேற்றுள்ளனர்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தினர் இடிந்த கரையில் கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கூடங்குளம் அணு உலையில் எரிபொருள் நிரப்பும் பணி தொடங்கியது. இதனால் அதிர்ச்சியடைந்த போராட்டக்காரர்கள் கூடங்குளம் அணுமின் நிலையத்தை. கடல் வழியாக மீண்டும் முற்றுகையிடப் போவதாக அறிவித்தனர்.

இதையடுத்து பொலிஸ் படை கூடங்குளம் பகுதியில் குவிக்கப்பட்டது. போராட்டத்தின் போது பொலிஸார் ஊருக்குள் நுழைந்து விடாமல் இருப்பதற்காக இடிந்தகரை சுனாமி கொலனிப் பகுதியில் 2 இடங்களில் போராட்டக்காரர்கள் வீதியில் குழி தோண்டி துண்டித்தனர்.

மேலும் சுனாமி கொலனிப் பகுதியில் 3 இடங்கள், இடிந்தகரை அருகே ஒரு இடம் என 4 இடங்களில் வீதியின் குறுக்கே முள் செடிகளை வெட்டிப் போட்டு தடைகள் ஏற்படுத்தினர்.

கடந்த முற்றுகை போராட்டத்தின் போது போராட்டக்காரர்கள் பொலிஸாரைத் திசை திருப்பிவிட்டு மாற்று வழியில் சென்று அணு உலையை முற்றுகையிட்டது போல் நடக்காமல் இருக்க கூடங்குளம், இடிந்தகரை, தோமஸ் மண்டபம், வைராவிகிணறு உள்ளிட்ட பகுதிகளில் பொலிஸ் படை குவிக்கப்பட்டுள்ளது.

போராட்டக்காரர்கள் அணுமின் நிலையத்தை 500 மீற்றர் தூரத்தில் நின்றபடி முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். இருந்த போதிலும் அவர்கள் அணுமின் நிலையம் அருகே வந்து விடாமல் தடுப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பொலிஸார் செய்திருந்தனர்.

மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் துப்பாக்கி ஏந்தியபடி அணுமின்நிலைய கண்காணிப்பு கோபுரங்களில் நின்று கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

# தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த 14 செயற்கைகோள்கள் விண்ணில்

(பெங்களூரு)

தகவல் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தும் வகையில், 14 செயற்கைகோள்களை விண்ணில் செலுத்த இஸ்ரோ முடிவு செய்துள்ளது. இது குறித்து இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவிக்கையில்.

நடப்பு ஐந்தாண்டு திட்ட காலத்தில் 58 திட்டங்கள் நிறைவேற்றப் படவுள்ளன. இவற்றில், 33 திட்டங்கள் செயற்கைகோள்களை செலுத்துவது தொடர்பானவை. 25 திட்டங்கள் ரொக்கெட் அனுப்புவது குறித்தவை.

டி.டி.எச். சேவை, செயற்கைகோள் தகவல் தொடர்பு போன்றவற்றுக்கான தேவை அதிகரித்துள்ளதால், அவற்றை சமாளிக்கும் வகையில், கூடுதலாக 400 டிரான்ஸ்பாண்டர்களை நிறுவவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, சந்திரன் மற்றும் செவ்வாய் கிரகத்துக்கு இஸ்ரோ சார்பில் விண்கலங்கள் அனுப்பப் படவுள்ளதோடு, வெள்ளம், புயல் உள்ளிட்ட, இயற்கைச் சீற்றங்களை முன் கூட்டியே அறிந்து, தகவல் அனுப்பும் வகையில், செயற்படுத்தப்படவுள்ளது.

## வாழ்க வளமுடன்

சிறாரீன் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# தலிபான் இயக்கத்தில் சேர மறுப்பு; இரு சிறுவர்கள் சுட்டுக்கொலை



தலிபான் இயக்கத்தில் சேர மறுத்த நபரின் இரண்டு சிறுவர்களையும் தலிபான்கள் சுட்டுக் கொன்றுள்ளார்.

ஜனாதிபதி ஹமீத் கர்சாய் தலைமையில், ஆப்கானிஸ்தானில் தற்போது ஜனநாயக ஆட்சி நடந்தாலும் பல மாவட்டங்கள் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன.


ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் உள்ளது காஸ்னி மாகாணம். இங்குள்ள ஈத்கா என்ற பகுதியைச் சேர்ந்த ஜல்மாய்.

பொலிஸ் அதிகாரியாக உள்ளார். இவரைத்தங்கள் இயக்கத்தில் சேரும் படி தலிபான்கள் வற்புறுத்தியுள்ளனர்.

இதற்கு மறுப்புத் தெரிவித்ததால் ஜல்மாயின் வயது 16, ஒன்பது வயது மகன்களை தலிபான்கள் நேற்று முன்தினம் சுட்டுக் கொன்றனர்.

பொலிஸ் வேலையை விடாததாலும், அவர்கள் இயக்கத்தில் சேராத காரணத்தாலும் தலிபான்கள் இந்தக் கொலையை செய்துள்ளதாக ஜல்மாய் தெரிவித்து உள்ளார்.

# வடகொரியாவை தாக்கும் ஏவுகணை; அமெரிக்காவுடன் கைகோர்க்கும் தென்கொரியா



அமெரிக்காவின் உதவியுடன் வட கொரியா முழுமையும் சென்று தாக்கும் வகையில் தன் ஏவுகணை திறனை மும்மடங்கு தென் கொரியா. அதிகரிக்கவுள்ளது.

அமெரிக்காவுடன் மேற்கொண்டுள்ள புதிய ஒப்பந்தத்தின்படி, 800 கிலோமீற்றர் தொலைவு சென்று தாக்கும் வகையில் ஏவுகணைகளை தென் கொரியா தயாரிக்கவுள்ளது.

தென் கொரியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சுன் யுங்-வூ இதனை உறுதிப்படுத்தியுள்ளார். அவர் கூறுகையில், வடகொரியாவின் இராணுவ அச்சுறுத்தல்களை சமாளிக்கும் விதத்தில் இந்த சீரமைப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

இருப்பினும் ஏவுகணையின் 500 கிலோ சுமை திறன் அதிகரிக்கப்படவில்லை. குறுகிய தூர ஏவுகணைகளில் சுமை திறனை அதிகரிக்க அனுமதி கோரப்பட்டுள்ளது.

800 கிலோ மீற்றர் தொலைவு சென்று தாக்கும் வகையில் ஏவுகணையின் திறன் அதிகரிக்கப்படுவதன் மூலம், வடகொரியா முழுவதும், சீனா, ஜப்பான் நாடுகளின் சில பகுதிகளையும் தாக்குதல் இலக்கில் கொண்டு வர முடியும்.

தென் கொரியாவும் அமெரிக்காவும் செய்து கொண்டுள்ள இராணுவ ஒப்பந்தத்தின்படி, தென் கொரியாவில் 28 ஆயிரம் அமெரிக்க இராணுவ வீரர்கள் உள்ளனர். தென் கொரியா மீது வட கொரியா அணு ஆயுத தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா, தென் கொரியாவுக்கு ஆதரவாகக் களமிறங்கும் என்று தெரிவித்துள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் வட கொரியா அணு ஆயுத ஏவுகணைப் பரிசோதனையில் ஈடுபட்டதை அடுத்து, தென் கொரியாவும் ஏவுகணைத் திறனை அதிகரிக்க அனுமதி கோரியது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# அமெரிக்காவுக்கு எதிரான பேரணியை தடுத்து நிறுத்திய பாகிஸ்தான் படைகள்



பாகிஸ்தானில் பழங்குடியின பகுதியில் அமெரிக்காவின் வான் வழி தாக்குதலைக் கண்டித்து அமைதிப் பேரணி மேற்கொண்டுள்ள இம்ரான்கானை அந்நாட்டு இராணுவம் தடுத்து நிறுத்தியது.

பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியான வஜிரிஸ்தான் மாகாணத்தில் தலிபான் தீவிரவாதிகள் பதுங்கியுள்ளனர்.

அவர்களைக் குறி வைத்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர், ஆளில்லா விமானம் மூலம் குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர். இத்தாக்குதலில் பொது மக்கள் பலரும் பலியாகி வருகின்றனர்.

எனினும் அமெரிக்கா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு பாகிஸ்தான் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் முன்னாள் கிரிக்கெட் வீரரும், தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி தலைவருமான இம்ரான்கான், ஏராளமான ஆதரவாளர்களுடன் கடந்த 6ஆம் திகதி அமைதி பேரணி தொடங்கினார்.

பழங்குடியினர் அதிகம் வசிக்கும் வஜிரிஸ்தான் பகுதிகளுக்குள் பேரணியினர் நுழைய முயன்ற போது, அவர்களை அந்நாட்டு இராணுவம் தடுத்து நிறுத்தியது.

# ஜேர்மனியில் செலவுகள் அதிகம் இருவேலை செய்யும் மக்கள்



ஜேர்மனியில் செலவுகள் அதிகமாக இருப்பதால், அதனை சரி செய்வதற்காக பலரும் இரண்டு வேலைகள் செய்து வருவது தெரியவந்துள்ளது.

மக்களின் பணிகள் குறித்து மத்திய வேலைவாய்ப்பு துறை ஆய்வு நடத்தியது. இதில், தற்போது 2.5 மில்லியன் பேர் இரண்டு வேலைகள் செய்வது தெரியவந்தது.


இந்த எண்ணிக்கை கடந்த 2003ஆம் ஆண்டில் சுமார் 1.2 மில்லியன் பேர் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டாண்டுகளில் குறிப்பாக யூரோ நெருக்கடி ஆரம்பித்த பின்பு இரண்டாவது வேலை செய்வோரின் எண்ணிக்கை பெருகிவிட்டது.

இரண்டாவது வேலை செய்பவர்களில் பெண்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும். இவர்கள் வருமான வரி செலுத்தாத வேலைகளை செய்து, மாதத்துக்கு 400 யூரோ வரை சம்பாதிக்கின்றனர்.

பசுமை கட்சியை சேர்ந்த பிரிஜெட் போத்மெர் கூறுகையில், இரண்டாவது வேலை செய்பவர்கள் நன்கு படித்தவர்கள் ஏற்கெனவே நல்ல சம்பளம் பெறுபவர்கள்.ஆனால் இவர்கள் இந்த இரண்டாவது வருமானத்துக்கு வரி செலுத்துவதில்லை. இது அநியாயம் என்றார்.இந்நிலையில் அரசு தற்போது புதிய வேலை வாய்ப்பு திட்டமொன்றைத் தொடங்கி, அதன் மூலம் பலருக்கும் வேலை வாய்ப்பு வழங்கி வருமான வரி வசூலிக்க முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

# உடம்பில் மூலக் கூறுகளை ஆராய விமான நிலையங்களில் ஸ்கானர்



உடம்பில் உள்ள மூலக் கூறுகளை ஆராய அடுத்த தலைமுறை ஸ்கானர் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசின் முயற்சியால் உருவாக்கப்பட்டு வரும் இந்த புதிய தொழில்நுட்ப ஸ்கானர்கள், உடம்பில் உள்ள ஒவ்வொரு மூலக்கூறுகளையும் ஆராயும் பொருட்டு விமான நிலையங்களில் பொருத்தப்படவுள்ளன.

50 மீற்றர் தூரத்திலிருந்து இயக்கப்படும், இந்த அதி நுட்ப ஸ்கானர், பயணிகளைப் பற்றி முழுமையாக கவனிக்கும் ஆனால இதை பற்றி பரிசோதிக்கப்படுபவர் சிறிதும் உணர முடியாது உடம்பில் மற்றும் உடைமைகளில் மறைக்கப்பட்டுள்ள போதைப பொருட்கள் மற்றும் பணத்தினைக் கண்டு பிடிக்க இக்கருவி மிகவும் உதவும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபத்தை விளைவிக்கக் கூடிய வெடிப்பொருட்கள் குறிப்பிட்ட எல்லையை அடைவதற்கு முன்னரே மிக துல்லியமாகத் தெரிவிக்கும் வகையில் மிக மிக அதிவேகமாக செயற்படக் கூடியது இந்த ஸ்கானர். இதை விமான நிலையம் மட்டு மின்றி பெரியகட்டடங்கள் மற்றும் தெருகளிலும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# சீன அரசை எதிர்த்து திபெத்தில் தீக்குளிப்பு

சீன அரசை எதிர்த்து திபெத்தில் 27 வயது மதிக்கத்தக்க இளைஞரொருவர் தீக்குளித்துள்ளார்.

கன்ஸூ என்ற மாகாணத்தில் திபெத்தியர்கள் அதிகம் வாழும் பௌத்த மடம் உள்ளது. இம் மடத்தில் வசித்து வந்த இளைஞரே தீக்குளித்துள்ளார்.

திபெத்தில் மத சுதந்திரமும், மொழி சுதந்திரமும் வேண்டும், தங்களது தலைவர் தலாய்லாமா திபெத்திற்கு திரும்ப அழைக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இவர் தீக்குளித்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



சீன அரசை எதிர்த்து கடந்த 2009ஆம் ஆண்டிலிருந்து இளைஞர்கள் தீக்குளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதித் தேர்தலில் 4ஆவது முறையும் வெற்றி

. தென் அமெரிக்க நாடான வெனிசுலா ஹுகோசாவேஷ் கடந்த 14 ஆண்டுகளாக தொடர்ந்து ஜனாதிபதி பதவி வகித்து வருகிறார். தேர்தலில் வெற்றி பெற்றிருப்பதன் மூலம் தற்போது 4ஆவது முறையாக மீண்டும் ஜனாதிபதியாகியுள்ளார்.

ஆளும் குடியரசு கட்சியின் சார்பில் ஜனாதிபதி ஹுகோசாவேஷ் (வயது-58) போட்டியிட்டார். அவரை எதிர்த்து 30 எதிர்க் கட்சிகள் சேர்ந்து கூட்டணி அமைத்தன. அக்கட்சியின் வேட்பாளராக ஹென்ரிக் கபிரில்ஸ் களம் இறங்கினார். அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் வாக்குப் பதிவு நடந்தது. அதில் 1 கோடியே 90 இலட்சம் பேர் வாக்களித்தனர்.

உடனடியாக வாக்குகள் எண்ணப்பட்டன. 90 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், ஜனாதிபதி ஹுகோசாவேஷ் 74 இலட்சத்து 44 ஆயிரத்து 82 வாக்குகள் பெற்று வெற்றி அடைந்ததாக அறிவிக்கப்பட்டார். அவர் பெற்ற வாக்குகள் 54.42 சதவீதமாகும். இவரை



எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க் கட்சி வேட்பாளர் ஹென்ரிக் காபிரில்ஸ் 61 இலட்சத்து 51 ஆயிரத்து 554 வாக்குகள் பெற்றார். இவர் 44.97 சதவீத வாக்குகள் பெற்றுள்ளார்.

வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதும் ஹுகோசாவேஷ் கட்சியினர் நாடு முழுவதும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். கராகஸ் நகரில் உள்ள ஜனாதிபதி மாளிகை முன்பு பட்டாசு கொளுத்தியும் நடனமாடியும் தங்கள் சந்தோஷத்தை வெளிப்படுத்தினர்.

# வடக்கில் நீதிமன்றங்கள் ஸ்தம்பிதம்

# போராட்டத்தில் குதித்தனர் ஊழியர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் - கிளிநொச்சி நீதிமன்றங்களின் செயற்பாடுகள் நேற்று ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் இனம்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு இலக்காகி யமையைக் கண்டித்து நாடுபூராகவும் நீதிச்சேவையினர் மேற்கொள்ளும் பங்களிப்புப் போராட்டத்தை அடுத்தே யாழ் - கிளி நொச்சி நீதிமன்றங்களின் செயற்பாடுகள் நேற்று ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டது.

நேற்றுக் காலை யாழ் - கிளிநொச்சி நீதிமன்றங்களுக்கு நீதிபதிகள் சமூகம் தராததை அடுத்து இந்தத் தினத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த வழக்குகளுக்கு வேறு திகதி வழங்கப்பட்டதனை அடுத்து வழககுக்கு நீதிமன்றங்களுக்கு வந்திருந்த பெருமளவு மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பியதை அவதானிக்க முடிந்தது.

இருந்தும் நீதிச்சேவையினரின் இந்தப் பங்களிப்புப் போராட்டம் குறித்து நீதிச்சேவை ஆணைக்குழு வரும் நாட்களில் போராட்டததைத் தொடர்வதா, இல்லையா என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

## கேப்பாப்புலவில் குடிநீர் வசதி

சூரிபுரத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள கேப்பாப்புலவு மக்களுக்கு குடிதண்ணீரை பெற்றுக கொள்வதற்காக கிணறுகளை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

120 குடும்பங்களை சேர்ந்த மக்களும் குடிநீர்க்கு பொரும் கஷ்டங்களை எதிர்நோக்கிய நிலையில் இது தொடர்பில் பல தரப்பாலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதை அடுத்தே கிணறுகளை அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த அப்பகுதி மக்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த நீர்த்தாங்கிகளிலும் குடிநீர் பெறக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். இதேவேளை குழாய் கிணறுகளும் அமைக்கப்பட்டு வருவதுடன் நிவாரணப் பொருட்களைப் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களும் தமக்கு வழங்கி.வருவதாகவும் தெரிவித்தனர். (160)

## உளநல தினம்

(வவுனியா)

வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தில் சர்வதேச உளநல தினவிழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய அக்குவைனஸ் கேட்போர் கூடத்தில் “விரும்பத்தக்க மனிதராய் நம்மை நாமே செதுக்குவோம்” எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் அன்டன் சோமராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையினை வவுனியா தெற்கு வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் தவரட்ணம் நிகழ்த்த, நன்றியுரையினை ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆறு. சுபாஸ்கரன் ஆற்றவுள்ளார். இதன்போது பிரதம விருந்தினராக வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ் கலந்து கொள்ளவுள்ளதுடன் மாணவர்களின் உள ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளும் உள வெளிப்பாட்டு ஆக்க கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

## அத்துமீறும் இந்திய மீனவர்கள் தடுத்து நிறுத்தும்படி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எமது நாட்டு கடல் எல்லைக்குள் வந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீன்பிடிப் படகுகளை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு அமைய இது பற்றிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இத் தீர்மானத்தின்படி இந்திய அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இதன் பிரதிகள் அனுப்பப்படும் என்றும் இதற்கான நடவடிக்கைகள், பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாகவும் விரைவில் இதற்கான தீர்வு எட்டப்படும் என்றும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார். (இ)

## குளம் துப்புரவுப் பணி

(வவுனியா)

வவுனியா குளத்தில் வர்த்தகர்களும் பொதுமக்களும் குப்பைகளை கொட்டி அசுத்தப்படுத்தி வருவதனால் சுற்றாடல் பொலிஸாரும் நீர்ப்பாசனத் திணைக்களமும் இணைந்து துப்புரவு செய்யும் பணியை ஆரம்பித்துள்ளது.

குளத்தின் ஒரு பகுதியில் இருக்கும் வர்த்தக கட்டடங்களால் விளகுகள் மற்றும் கழிவுப்பொருட்கள் குளத்தினுள் இடப்பட்டு வருவதுடன் பொதுமக்களும் வீட்டுக் கழிவுப் பொருட்களை வீசி வந்திருந்தனர். இந்நிலைய்யில் பலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டம் அறவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் குளத்தினை துப்புரவு செய்து சுற்றாடல் பொலிஸாரின் கீழ் கண்காணிக்க நீர்ப்பாசனத்திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டதனை அடுத்து நேற்று குளத்தினை துப்புரவு செய்யும் பணி நீர்ப்பாசன பொறியியலாளரின் தலைமையில் ஆரமபித்து வைக்கப்பட்டது. (160)

### மரக்கிளை...

சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். மரண விசாரணைகளைப் பருத்தித்துறை பொலிஸாரும் மரண விசாரணை அதிகாரியும் மேற்கொண்டு வருகின்றனர். (116,01)

### இயக்கச்சி...

தேவானந்தா தற்சமயம் இந்த வீதியின் பகுதிகளில் வேகத்தடை போடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. அதற்கமைய அதனை முதலில் செயற்படுத்திப் பார்த்துவிட்டு அதற்குப் பிற்பாடு இந்த வீதியினை நேராக்குவது குறித்து கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்துக் கொண்டதுடன். வீதி அபிவிருத்தித் திணைக்களப் பொறியியலாளரின் கோரிக் ஷக்யைய்யும் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார். (பா,இ)

### ஜப்பான்...

அறிவிப்பு நேற்று அறிவிக்கப்பட்டது. ஸ்டெம் செல் உருவாக்கம் குறித்த மருத்துவ ஆராய்ச்சிக்காக பிரிட்டனின் ஜோன் கர்டன், ஜப்பானின் ஷின்யா யமனகா ஆகியோருக்கு இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

கர்டன், யமனகா ஆகியோரின் கண்டுபிடிப்புகள், உலகம் முழுவதிலும் உள்ள மருத்துவ ஆராய்ச்சியாளர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்று ஸ்டாக்ஹோம் கரோன்லின்ஸ்கா மருத்துவ ப்ல்கலைக்கழக தேர்வுக்குழு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட முதல் நோபல் பரிசு இதுதான். இயற்பியலுக்கான நோபல் பரிசு இன்று அறிவிக்கப்படுகிறது. வேதியியலுக்கான நோபல் பரிசு புதன்கிழமையும், இலக்கியத்துக்கான நோபல் பரிசு வியாழக்கிழமையும், அமைதிக்கான நோப்ல் பரிசு வெள்ளிக்கிழமையும் அறிவிக்கப்படும் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு 15 ஆம திகதியும் அறிவிக்கப்படுகிறது. அனைத்து பரிசுகளும் நோபல் நினைவு நாளான டிசம்பர் 10 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

### அதிகரித்தது...

உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிப்பால் மதுபானத்தின் விலையையும் அதிகரிக்க நேர்ந்ததாக அக்கம்பனி மேலும் குறிப்பிட்டது. இதன்படி மதுபானங்களின் விலைகள் அதன் மதுசார தனமைகளின் அடிப்படையில் 20 ரூபா முதல் 40 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. ஏற்கனவே சிகரட்டின் விலை 2 ரூபாவால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மதுபானம். சாராயம், வெளிநாட்டு மதுபானவகை மற்றும் பியர் வகைகளுக்கான சுங்க வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு நேற்று அறிவித்துள்ளது. இவ்வரி அதிகரிப்பு ஆறாம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

### சொந்த...

அரைவாசிப் பகுதியிலும் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் எனவே இதேபோன்று ஏனைய பிரதேசங்களின் மீள்குடியேற்றம் தொடர்பிலும் படிப்படியாக முன்னேற்றம் காணவேண்டும் எனவே இதனை அரசியல் ஆதாயத்தோடு அணுகாமல் மக்களின் நலன்கருதி செயற்பட்டு தீர்வு காணவேண்டும். என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இந்த உறுதிமொழியை அளித்தார்.

கூட்டத்தின் தொடக்கத்தில் அரச அதிபரின் வரவேற்புரையினைத் தொடர்ந்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்காக பல அபிவிருத்தித் திட்டங்கள் நேற்று சமர்ப்பிக்கப்பட்டன. தொடர்ந்து துறை ரீதியிலான அபிவிருத்தி மற்றும் முன்னேற்றங்கள் பற்றி திணைக்களத் தலைவர்களினால் மீளாய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

விவசாயம், நீர் விநியோகம், சுகாதாரம், மின் விநியோகம், கல்வி, வர்த்தகம் தொழில்துறை வீடமைப்பு, போக்குவரத்து, உள்ளூராட்சி சபைகள் சமுர்த்தி, மீள்குடியேற்றம் கண்ணிவெடி அகற்றல், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் விசேட திட்டங்கள் பற்றியும் அங்கு மீளாய்வு செய்யப்பட்டது.

துறைசார் திணைக்களங்களின் தலைவர்களினால், மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய நிலைமைகள், மற்றும் செயற்பாட்டின் பயன்பாடுகள் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கின்ற முறைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டதுடன், இதற்கான அபிப்பிராயங்களும் கேட்டறியப்பட்டது.

திட்டச்செயற்பாடுகளுக்கு மேலும் வலுவூட்டும் வகையிலான தீர்மானங்கள் சில எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் சில தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டிருந்தது. இத்தீர்மானங்களுக்கு ஆதரவு அளிக்கப்பட்டு. நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்வதற்காக இக்கூட்டத்துக்கு தலைமை தாங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் உறுதியளிக்கப்பட்டது.

வடக்கின் மீள்குடியமர்வு, நிலப்பயன்பாடு குறித்து அடுத்த மாதம் முதலாம் திகதி விசேட மாநாடு ஒன்றை யாழ். செயலகத்தில் நடாத்துவதற்கும் நேறறைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த கூட்டத்தின் அறிக்கை மற்றும் நேற்றைய கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் குறித்து தமக்கு அறிவிக்கப்படவில்லை என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது எதிப்பைத் தெரிவித்தன நிலையில் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் நடைபெறாது என அமைச்சர் உறுதியளித்தார்.

இக்கூட்டத்தில் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், மாவை சேனாதிராஜா, சுமந்திரன், விநாயகமூர்த்தி, சுரேஷ் பிரேமச்சந்திரன், ஸ்ரீதரன், சரவணபவன் மற்றும் திணைக்களத் தலைவர்கள், கல்லூரிகளின் அதிபர்கள், பொலிஸ், இராணுவ, கடற்படை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (இ,பா)

### பிளவடைந்த...

பிரதிநிதிகளுடன் சந்திப்பை மேற்கொள்ளவுள்ள கூட்டமைப்பு தூதுக்குழுவில் 2 அல்லது 3 கட்சிகளின் பிரதிநிதிகளே செல்லவுள்ளதாக அறிகின்றேன்.

5 கட்சிகள் கொண்ட கூட்டமைப்பில் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

ஆகவே இது முழுமையான ஒரு கூட்டமைப்பின் விஜயமாக அமையப்போவதில்லை. அப்படி எம்மால் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. கூட்டமைப்பை இந்தியா வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டவுடன் என்னென்ன விடயங்கள் பேசப்போகின்றோம் என கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு அல்லது கட்சித் தலைவர்கள் கூடி ஆராய்ந்திருக்க வேண்டும்.

தூதுக்குழுவில் யார் யார் பங்குபற்றுவது என்பதனை யார் தீர்மானிக்கின்றார்கள் எனத் தெரியவில்லை. ஐந்து கட்சிகளின் தலைவர்களும் கூட்டாக கூட்டமைப்பாக இந்தியாவுக்குச் செல்லவேண்டும்.

குறிப்பிட்ட சில கட்சிகள் அல்லது தலைவர்கள் புறக்கணிக்கப் படுவர்களேயானால் ஏனைய தலைவர்களும் அல்லது கட்சிகளும் இந்திய விஜயத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை.


கூட்டமைப்பைக் குலைப்பதற்கோ, சிதைப்பதற்கோ வெளி நாட்டுச் சக்திகளுக்கு, உள்நாட்டு அல்லது உட்கட்சி சக்திகளுக்கும் இடமளிக்க முடியாது.

கூட்டமைப்பில் ஐந்து கட்சிகள் தற்போது அங்கத்துவம் பெறுகின்றன. அதில் இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதற்கு 2 கட்சிகளின் அங்கத்தவர்களே செல்கின்றனர். இந்திய அரசுடன் பேசுவதற்கு 3 கட்சிகளின் பிரதிநிதிகள் செல்கின்றனர்.தேர்தல் செயலகத்தில் பதிவு செய்த 4 கட்சிகளே கூட்டமைக்கின்றன.

தேர்தல் வரும்போது மட்டும் 5 கட்சிகளும் ஒன்றாக சேர்கின்றன. ஆக இது தேர்தலுக்கான கூட்டமைப்பா என மக்கள் சந்தேகிக்கின்றனர் 5 கட்சித் தலைவர்களும் அங்கத்துவம் இல்லாத பாதிக் கூட்டமைப்பு அல்லது துண்டாக்கப்பட்ட கூட்டமைப்பின் விஜயத்தை நாம் ஏற்கப்போவதில்லை. எமது கட்சி சார்பில் பிரதிநிதியை அனுப்பாமல் இருக்க கட்சிக்குள் அழுத்தங்களைப் பிரயோகிக்கப் போவதாகவும் ஏற்கனவே இந்திய அதிகாரிகள் கொழும்பு வரும்போது கூட்டமைப்பினர் இரண்டு அணியாக சந்தித்தமையையும் அவர் நினைவுபடுத்தினார்.

# மரணித்துவிட்டதா நீதித்துறை? சட்டத்தரணிகள் திரண்டு போராட்டம்

## மஞ்சுள திலகரட்ன மீதான தாக்குதலின் எதிரொலி



நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீதான தாக்குதலைக் கண்டித்து நேற்று நாடளாவிய ரீதியில் மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுக்கடை நீதவான் நீதிமன்றத்திற்கு முன்பாக சட்டத்தரணிகள், அரசியல் தலைவர்கள் என பலர் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதி சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன நேற்று முன்தினம் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் மற்றும் பணிப் பகிஷ்கரிப்பு என்பவற்றால் நீதிமன்ற செயற்பாடுகள் முற்றாக தடைப்பட்டிருந்ததுடன், நேற்று நடைபெறவிருந்த வழக்கு விசாரணைகள் பிறிதொரு நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

அத்துடன் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீதான தாக்குதல் சம்பவத்தைக் கண்டிக்கும் வகையில் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டதுடன், நீதிமன்றக் கட்டடத்தைச் சுற்றி கறுப்பு துணிகளும் கட்டப்பட்டிருந்தன.

இதன்போது நீதித்துறையில் அரசியல் மற்றும் ஏனைய சக்திகளின் தலையீடு, நீதித்துறை மீதான அழுத்தம், அச்சுறுத்தல் குறித்த பதாதைகளையும், ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

அத்துடன் நீதிச்சேவை மரணித்து விட்டதனை பிரதிபலிக்கும் வகையில் சவப்பெட்டியினையும், மலர் வளையத்தினையும் சுமந்து சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் உயர்நீதிமன்ற வளாகத்திற்குள் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். பின்னர் நீதிமன்றக் கட்டடத் தொகுதி வீதியில் அதற்கு எரியூட்டி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

# விரிவுரையாளர்களுக்கு புதிய சம்பள முறைமை

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வாக புதிய சம்பள முறைமை ஒன்றை தயாரிக்க நிதி அமைச்சு இணக்கம் வெளியிட்டுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கங்களின் சம்மேளனத்தின் செயலாளர் டெரன்ஸ் மடுஜித் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர இந்த இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த புதிய வேதன முறைமை தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளருடன் இன்று இடம்பெறவுள்ள கலந்துரையாடலின் போது, அறிவிக்கவுள்ளதாக டெரன்ஸ் மடுஜித் தெரிவித்துள்ளார்.

வேதனம் தொடர்பான முறைமை குறித்து நாளைய தினம், சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவிடம் அறிவித்து, தொழில் சங்க போராட்டத்தை கைவிடுவது தொடர்பான இறுதித் தீர்மானம் எட்டப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவிலிருந்து திரும்பியதும் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண நம்பிக்கை

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து நாடு திரும்பியதும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து கொள்ளும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகளில் பங்கேற்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

ஐ.தே.க., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. என்று எல்லாக் கட்சிகளும் தெரிவுக் குழுவில் தமது முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம்.

முதலில் எதிர்க்கட்சிகள் எந்தெந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதை இனங்காண வேண்டும்.

இந்திய அரசுடனான பேச்சுக்களை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அவர்களும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பற்றிய தமது பட்டியலை சமர்ப்பிப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விவசாயத்துறை மேம்பாடு; மன்னாருக்கு நிதியுதவி

மன்னார் மாவட்டத்தில் விவசாய துறையை மேம்படுத்துவதற்கு ஐந்து இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்மைய மன்னார் மாவட்டத்தின் ஏழு பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 700 விவசாயக் குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள், மரக்கன்றுகள் மற்றும் விதை நெல் ஆகியன விநியோகிக்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனைத் தவிர மேலதிக பயிர் செய்கையாக கச்சான், சின்ன வெங்காயம், மிளகாய், உழுந்து, பாசிப்பயிறு, சோளம் ஆகியவற்றை செய்கையிடுவதற்கான உதவிகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மேலதிக பயிர்ச்செய்கையை மேற்கொள்வது தொடர்பாக விவசாய அமைச்சு ஏற்கனவே ஆயிரத்து 450 செயலமர்வுகளை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் மாநில கட்சியாக மாறியுள்ள கூட்டமைப்பு

## கூறுகிறது ஹெல உறுமய



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் மாநிலக் கட்சியாக மாறியுள்ளதாகவும் அவர்களின் இந்திய விஜயத்தினால், இலங்கையில் தலையீடுகளை மேற்கொள்ள இந்தியாவுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை ஏலமிட நடவடிக்கை எடுத்துள்ளதன் மூலம் தமிழ் மக்கள் மேலும் நெருக்கடியை சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தியாவின் சாஞ்சி பிரதேசத்திற்கு விஜயம் செய்த பின்னர், இந்தியப் பிரதமர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கையின் அரசியல் கட்சி யாக செயற்படவில்லை என்பதும் அது இந்தியாவின் மாநில கட்சியாக செயற்படுகிறது என்பதும் தெளிவாகியுள்ளது.

தமிழ் மக்களின் துன்ப துயரங்கள் குறித்து பேசுவதென்றால் அதனை ஜனாதிபதியுடனேயே பேச வேண்டுமே அன்றி, இந்தியாவுடன் அல்ல. இந்தியாவை கொண்டு இலங்கை மீது அழுத்தங்களை கொடுத்து பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த ஏலம் காரணமாக வட பகுதிக்கு எதுவும் கிடைக்கவில்லை எனவும் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க கூறியுள்ளார்.

# நவம்பரில் வரி வாரம் அரசாங்கம் அறிவிப்பு

ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 'வரி வாரம்' அனுஷ்டிக்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. பல்நோக்கு அடிப்படையில் இந்த வரி வாரத்தை பின்தொடர தீர்மானித்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

ஜனாதிபதியும், நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ மூலம் முன்மொழியப் பட்டிருந்த இந்த பிரேரணைக்கு அமைச்சரவை கடந்த புதன்கிழமை அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. 2012ஆம் ஆண்டுக்கான 'வரி வாரம்' நவம்பர் மாதம் 1ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை அனுஷ்டிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த வரி வாரத்தின் போது பொதுமக்கள் மத்தியில் அரசாங்க வரிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், இலங்கையில் அமுலிலுள்ள வரி அறவீட்டு முறைகள், தாபனங்களின் செயற்பாடுகள் குறித்து, பொது மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவது, பொதுமக்களை வரி செலுத்த ஊக்குவிப்பது போன்ற ஊக்குவித்தல் நடவடிக்கைகளும் இக்காலப்பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ளன.

# எந்தக் கட்சி ஆட்சி செய்தாலும் நீதியை நிலைநாட்ட வேண்டும்

## கூறுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

நாட்டில் அராஜக நிலைமை நீடிக்குமாயின் அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடுமென கடந்த சில தினங்களுக்கு முன்னர் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்திருந்தார்.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எந்தக் கட்சி ஆட்சி செய்தாலும் நாட்டில நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆட்சி நடத்துவது ஐக்கிய தேசியக் கட்சியாகவோ, சுதந்திரக் கட்சியாகவோ அல்லது வேறு கட்சியாகவோ இருக்கலாம்.

எனினும், நீதியான ஆட்சி முன்னெடுக்கப்பட வேண்டியது முக்கியமானது. நகரங்கள் அலங்கரிக்கப்பட்டாலும், வீதிகள் அமைக்கப்பட்டாலும் நாட்டில் அராஜகம் தலைவிரித்தாடினால் அபிருத்தியை ஏற்படுத்த முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

# ஒரு இலட்சத்தில் 20 பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிப்பு

இலங்கையில் ஒரு இலட்சத்தில் இருபது பெண்கள் என்ற அடிப்படையில் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. வருடம் ஒன்றிற்கு ஒரு இலட்சத்தில் 4.7 வீதமான பெண்கள் மார்பகப் புற்றுநோயின் காரணமாக உயிரிழப்பதாக அமைச்சுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

மார்பகப் புற்றுநோயை ஆரம்ப கட்டத்தில் அறிந்து கொள்வதற்கான பரிசோதனை கள் நாடளாவிய ரீதியில் 700 மத்திய நிலையங்களில் மேற் கொள்ளப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் பெரும்பாலான பெண்கள் இப் பரிசோதனைகள் குறித்து கவனத்திற் கொள்வதில்லை என சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

உரிய பரிசோதனைகளின் மூலம் மார்பகப் புற்று நோயை ஆரம்பக் கட்டத்தில் இனங்கண்டு சிகிச்சை வழங்குவதன் மூலம் உயிரிழப்புக்களை தவிர்த்துக் கொள்ளலாம் என அவ் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் மாதம் மார்பகப் புற்று நோய் விழிப்புணர்வு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.